இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 17 | திகதி : 08.12.2024 | விலை : 50.00

## யூபிலி ஆண்டு நாம் கிறிஸ்துவின் ஓர் உடலாக நம்பிக்கையுடனும், எதிர்நோக்குடனும், பணிவாழ்வுடனும் பயணிக்க அழைக்கின்றது

### திருவருகைக்கால திருமடலில் யாழ்.ஆயர்



திருவருகைக்கால ஆரம்பத்தில் யாழ் ஆயர் அவர்கள் திருமடல் ஒன்றை இறைமக்களுக்கு வரைந்துள்ளார் அம்மடலிலேயே மேற்கூறியவாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்: இறைமக்களாகிய நாம் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட்டங்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்திவிடாது நற்செயல்கள் மூலம் இக்காலத்தை பிறரன்புப் காலமாக மாற்றி அமைப்போம். கிறிஸ்து உலகிற்கு ஒளியாக வந்தார். அவரைப் பின்பற்றும் இறைமக்களாகிய நாம் ஒளியின் மக்களாக எம்மை மாற்றிப் பிறரது சுமைகளைச் சுமக்கும் சுமை தாங்கிகளாகவும், சமூகத்தின் இருள்களைக்களையும் ஒளிச் சுடர்களாகவும் அர்த்தமுள்ள வகையில் கிறிஸ்துவின் பிறப்பில் களிகூர்ந்து நம்பிக்கையின் திருப்பயணிகளாக யூபிலி ஆண்டில் பயணிப்போம். மக்கள் ஊழல்மிகு அரசியல்வாதிகளை ஓரம்கட்டி, உண்மைக்காகவும், நீதிக்காகவும் அர்ப்பணத்துடன் பணியாற்றக்கூடியவர்களைக் கொண்ட ஓர் அரசாங்கத்தை அமைத்துள்ளனர். மக்களின் எதிர்பார்ப்பைப் புதிய அரசாங்கம் கருத்திற்கொண்டு செயற்படுவதன் வழியாக, எமது மண்ணில் நிலையான அமைதியும், பொருளாதார மேம்பாடும் செழித்தோங்க, பிறக்கவிருக்கும் பாலக இயேசு அருள்கூர வேண்டுமென அமையும் இத்திருமடலை முழுமையாக பக்கம் மூன்றில் காண்க.




## திருமறைக்கலாமன்ற தினமும் வைர விழா ஆண்டின் ஆரம்பமும்



திருமறைக் கலாமன்றம் 1965 ஆம் ஆண்டில் கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டது.இம் மன்றம் தனது தினத்தையும் வைர விழா ஆண்டின் ஆரம்பத்தையும் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பல்வேறு நிகழ்வுகளுடன் சிறப்பாக நினைவு கூர்ந்தது.அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு இல.17, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைஞானசுரபி தியான இல்லத்தில் நன்றித் திருப்பலி இடம்பெற்றது. இத்திருப்பலியை அருட்திரு போல் நட்சத்திரம் அமதி அடிகளார் ஒப்புக் கொடுத்தார்.அதனைத் தொடர்ந்து மன்ற பிரதான அலுவலகத்தின் முன்பாக மன்றக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது.தொடர்ந்து முற்பகல் 10.00 மணிக்கு இல.238,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கலைநிகழ்ச்சிகள் மாலை 4.00மணிக்கு இல.286.பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் ஆரம்பமாகி இடம் பெற்றன.இந் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக கௌரவ வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும்,சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சனும் கலந்து சிறப்பித்தார்கள்.மன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் இந்நிகழ்வுகளில் மங்கல விளக்கேற்றல்,இறைவணக்கம் என்பவற்றைத் தொடர்ந்து மன்ற இயக்குநர் ஆசியுரையை வழங்கினார்.தொடர்ந்து வைர விழா ஆண்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.இதன் போது பிரதம விருந்தினர் வைர விழா ஆண்டுக் கொடியைத் திரை நீக்கம் ப.2

## குளமங்கால் புனித சவேரியார் ஆலயம் புனரமைக்கப்பட்டுத் திறந்து வைப்பு



138 ஆண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க குளமங்கால் புனித சவேரியார் ஆலயம் புனரமைப்பு செய்யப்பட்டுப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அவ்வாலய திறப்பு விழாவும் ஆலய மற்றும் பலிப்பீட அபிசேக நிகழ்வும் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றன. பங்குத்தந்தை அருட்தந்தை பாஸ்கரன் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்ட **ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப் பிரகாசம்** அவர்கள் கலந்து அழகிய தோற்றத் துடன் அமைந்த ஆலயத்தை ஆசீர் வதித்துத் திறந்து வைத்து திருப்பலியைத் தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்தார். திருப்பலியை தொடர்ந்து ஆலய வருடாந்த திரு விழா விற்கானகொடி ஆயர் அவர களால் ஏற்றி வைக் கப்பட்டதுடன் இந நிகழ்வில் அருட்தந்தை யர்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்களெனப் பலரும் கலந்து கொண்டனர்.

## கரித்தாஸ் வன்னி கியூடெக்கில் மாதிரிப் பண்ணை



கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டு வந்த மாதிரிப் பண்ணையுடன் இணைந்த விவசாயத் தகவல் அறிவு மையம் மற்றும் உணவு அறை திறப்பு விழாவும் நிறுவன இணையத்தள அறிமுக நிகழ்வும் கடந்த 23ஆம் திகதி நடைபெற்றன. நிறுவன இயக்குநர் அருட்தந்தை செபஜீவன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் **குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம்** அவர்கள் கலந்து உணவு அறையைத் திறந்துவைத்தார். தொடர்ந்து கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற் அவர்கள் விவசாயத் தகவல் அறிவுமையத்தை ஆசீர்வதித்து, பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்யதுவைத்தார். கரித்தாஸ் தேசிய நிறுவன உணவு பாதுகாப்பு இணைப்பாளர் திருமதி. நிலானி திசாரா அவர்கள் தகவல் அறிவு மையத்தினை ப.2

## அரச இலக்கிய விருது பெறும் பேராசிரியர்

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்கள அரச இலக்கிய ஆலோசனைக் குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட அரச இலக்கிய விருது வழங்கும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி கொழும்பு அலரி மாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அருட்தந்தை பேராசிரியர் ஞானமுத்து பிலேந்திரன் அவர்களால் எழுதப்பட்ட 'போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் கத்தோலிக்கம்' எனும் நூல் 2023ஆம் ஆண்டின் சிறந்த புலமைத்துவ ஆய்வுசார் படைப்பாகத் தெரிவு செய்யப்பட்டு அதற்காக அடிகளாருக்கு சாகித்ய' விருது வழங்கப்பட்டது. இந்நூலானது போர்த்துக்கேயர் ஆட்சிக்கால கத்தோலிக்கம் பற்றி வெளிவந்த முதல் ஆய்வியல் நூல் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.






ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## துயாராய் இருப்போம்

மார்கழி மாதம் ஆரம்பமாகிவிட்டது. பாடசாலைகளுக்கு விடுமுறை. எம் பிள்ளைகள் மத்தியில் பண்டிகையுணர்வு மேலோங்கத் தொடங்கிவிட்டது. திருவருகைக் காலத்தை தொடங்கி இயேசு பிறப்பு விழாவிற்காக ஆன்மீக ஆயத்தங்கள் மேற்கொள்ளத் திருஅவை அழைப்பு விடுத்து நிற்கின்றது. அகில உலகத் திருஅவை யூபிலி ஆண்டுக்காகத் தயார் நிலையில் உள்ளது. இவ்வாசிரியர் தலையங்கத்தில் இயேசு இவ்வாண்டில் எம்மிடம் எதிர்பார்ப்பதை எதிர்வுகூற முனைகின்றேன்.

கிறிஸ்மஸ் பெருவிழாவைக் கொண்டாட நான்கு வாரங்கள் நாம் தயாராகின்றோம். எதற்காக? ஆண்டவருடைய வருகையை பொருள் உணர்ந்து ஆடம்பரமாகக் கொண்டாடி, நாம் எல்லோரும் உண்மையாகவே விண்ணகம் நோக்கிய பயணத்தில் ஆர்வமாகப் பயணிப்பதற்காகவே!

"உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது" என எச்சரிக்கும் இயேசு, "உங்கள் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும், இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறும், அந்நாள் திடீரென வந்து ஒரு கண்ணியைப் போல் உங்களைச் சிக்க வைக்காதவாறும் எச்சரிக்கையாய் இருங்கள்" (லூக் 21:34-35) என்கிறார்.

இன்று அலைபேசியின் பயன்பாட்டால் அருகில் இருப்பவர்களோடு உரையாட மறந்துவிடுகிறோம். இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையால் அமைதியை இழந்துவிடுகிறோம். தேவைகளைப் பெருக்கிக்கொள்ள ஆசைப்படுகிறோம்.

இன்று மூன்று செயல்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க ஆண்டவர் எமக்கு அழைப்பு விடுக்கிறார். 1. குடிவெறி, 2. களியாட்டம், 3. உலகைப் பற்றிய கவலை. இதற்கு மாற்றாக நாம் கடைப்பிடிக்க வேண்டிய மூன்றுசெயல்கள்: 1. விழித்திரு. 2. செபித்திரு. 3. ஆண்டவருக்காய் ஆவலுடன் காத்திரு என்பதாகும்.

நம் குழந்தைகளைக் குறித்தும், வாழும் வாழ்க்கை முறையைக் குறித்தும் எப்பொழுதும் விழிப்பாக இருக்க வேண்டும். இயேசு தம் வாழ்நாளில் செபத்திற்கு நேரத்தை ஒதுக்கியதுபோல, நாமும் செபத்திற்காக நேரத்தை ஒதுக்க வேண்டும். செபமின்றி வெற்றி இல்லை! "இயேசு தம்முடைய தூயோர் அனைவரோடும் வரும் பொழுது, நம் தந்தையாம் கடவுள் முன் குற்றமின்றி தூய்மையாக இருக்கவேண்டும். கடவுளுக்கு உகந்தவர்களாய் வாழும் முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும்" (1தெச 3:12 - 4:1), தூய்மையான உள்ளத்தோடு அவருக்காகக் காத்திருக்க வேண்டும்.

நம் கடவுள் வாக்கு மாறாதவர். இன்று மனிதர்கள் தாங்கள் கொடுத்த வாக்கை மீறலாம் அல்லது ஒருவர் மற்றவரை ஏமாற்றலாம். ஆனால், கடவுள் ஒருபோதும் எவரையும் ஏமாற்றக்கூடியவர் அல்லர். இஸ்ரயேல் மக்களைத் தனிப்பட்ட அன்பினால் தேர்ந்தெடுத்த ஆண்டவர், அவர்கள் பாவம் செய்த போதும் அவர்களைத் திருத்துவதற்காகவே கண்டித்தார். "எல்லாம் முடிந்துபோய் விட்டது. இனிமேல் வாழ்வு இல்லை" என்று நினைத்தபொழுது இறைவாக்கினர்கள் வழியாக நம்பிக்கையின் செய்தியை ஆண்டவர் அவர்களுக்குக் கொடுத்தார். "இதோ! நாட்கள் வருகின்றன. அப்போது இஸ்ரயேல் வீட்டாருக்கும், யூதா வீட்டாருக்கும் நான் கொடுத்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன்" (எரே. 33:14) என்கிறார். இன்றும் நமக்கும் ஆண்டவர் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார்.

பல வேளைகளில் நாம் மனமுடைந்து போயிருக்கலாம். "ஆண்டவர் மறந்துவிட்டாரோ" என்று நினைத்திருக்கலாம். ஆண்டவர் நம்மை மறப்பாரோ? ஒருபோதும் நம்மை அவர் மறக்கமாட்டார். "அந்நாள்களில் நான் தாவீதிலிருந்து நீதியின் தளிர் ஒன்று முளைக்கச் செய்வேன். அவர் நாட்டில் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவார்" (எரே. 33:15) என்கிறார் ஆண்டவர். நமக்கு நிகழும் அநீதியைக் குறித்து அல்லது நேர்மை இல்லாத செயல்களைக் குறித்து நாம் கவலை கொள்ளலாம். ஆண்டவர் மெசியாவைப் பிறக்க வைக்கிறார். தாவீதிலிருந்து ஒளிர்கின்ற தளிர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே. அவரே நீதியை நிலைநாட்டுவார். "ஆண்டவர் என்னைக் கைவிடமாட்டார்; என் ஆண்டவர் நல்லவர்; என் ஆண்டவர் வல்லவர்; அவரையே நம்பி இருப்போம்.

கடவுள் நம்மேல் அன்பாய் இருப்பது போல, நாமும் ஒருவர் மற்றவர்மேல் அன்பாய் இருப்போம். நம்மைச் சந்திக்க வரும் ஆண்டவரை அவருக்கு உகந்த வாழ்க்கையோடு, அன்பு நிறைந்த செயல்களோடு, மகிழ்ச்சி நிறைந்த இதயத்தோடு அவரைச் சந்திக்க விழிப்புடன் காத்திருப்போம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# இம்மானுவேல் கல்வி உதவித்திட்டம்

# 'Emmanuel Educational Assistance Scheme'



யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் தற்போதைய பணியாளர்களில் மூத்த அருட்பணியாளனாகிய நான் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கூற்றுக்கமைய, நான்பெற்றுக்கொண்ட கல்விச் செல்வத்தை வசதி குறைந்த மாணவர்களும் பெறவேண்டும் என்று விரும்புகின்றேன். எனது சிறுவயதிலிருந்து என்னை ஒரு நல்ல மாணவனாக வழிநடத்திய இறைவனின் தெய்வீக அருளுக்காக நன்றி தெரிவிப்பதற்காக இதைச் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன். எனது 27வது வயதில், ஒரு விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் போதே இறைவன் என்னைத் தன் பணியாளனாக அழைத்தார். அவரது பணியாளனாக, தூதுவனாக உலகின் பல பகுதிகளுக்குப் பயணம் செய்யவும், உலகின் பல பல்கலைக்கழகங்களில் கற்பிக்கவும் அதன் மூலம் பிறருக்கு உதவவும் கடவுள் எனக்கு வாய்ப்புக் கொடுத்தார். எனவே வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவுவதன் மூலம் எனது இதய நன்றி யைக் கடவுளுக்கு வெளிப்படுத்த விரும்புகிறேன். இவ்வுதவியைப் பெறும் மாணவர்களும் நல்ல கத்தோலிக்கப் பிரஜைகளாக வளர்ந்து, பிறருக்கும் உதவ வேண்டும் என ஆசிக்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயிலும் சில வசதி குறைந்த பட்டதாரி மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களது கல்வியில் ஊக்கமளிப்பதற்காக சிறிய உதவித்தொகையை வழங்கி வருகின்றேன். மேலும் பாடசாலைகளில் பயிலும் சில வசதி குறைந்த மாணவர்களுக்கும் சிறிய மாதாந்த உதவித்தொகையைப் பல ஆண்டுகளாக வழங்கி வருகின்றேன். எனது மறைவிற்குப் பின்னரும் வசதி குறைந்த மாணவர்களுக்கான இந்தக் கல்வி உதவி தொடரவேண்டும் என்று விரும்புகிறேன். ஒவ்வொரு கல்வி ஆண்டின் தொடக்கத்தில் 'இம்மானுவேல் கல்வி உதவித்திட்டம்' பற்றிய தகவலைப் பாதுகாவலன் பத்திரிகையில் அறிவித்துப் பங்குத்தந்தையர்கள் மூலம் விண்ணப்பங்களைப் பெற்று இவ் உதவித் திட்டத்தை நிறைவேற்ற எண்ணியுள்ளேன். எனவே உதவிதேவைப்படும் வசதி குறைந்த மாணவர்கள் உங்கள் பங்குத் தந்தையர்களைத் தொடர்பு கொண்டு அவர்களினூடாக எழுத்து மூல விண்ணப்பப் படிவங்களை அனுப்பித் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் மூத்த ஆசிரியன்,
அருட்பணியாளன் S.J. இம்மானுவேல்

எனது முகவரி: ஆயர் இல்லம் யாழ்ப்பாணம்
தொலைபேசி: 0763531104

# புனித சவேரியாரின் வழியில் நாம் அனைவரும் நற்செய்தியின் தூதுவர்கள் ஆவோம்

புனித பிரான்சிஸ் சவேரியாரின் புனித நினைவுச் சின்னங்களை வெளிப்படுத்துவது என்பது, பெரும் மறைபரப்புப் பணியாளரான அவரது கொண்டாட்டத்திற்கு இவ்வாண்டு ஒரு முக்கியத்துவத்தை சேர்க்கிறது என்று கூறினார் நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீடத்துறையின் தலைவரான, கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தாக்லே

டிசம்பர் 3 ஆம் திகதி இந்தியாவின் கோவா மாநிலத்திலுள்ள புனித சவேரியார் பேராலயத்தில் நிகழ்ந்த சிறப்புத் திருப்பலியின்போது இவ்வாறு தெரிவித்த கர்தினால் தாக்லே அவர்கள், அனைவரையும் நற்செய்தி அறிவிப்பாளார்களாக மாறவும் அழைப்பு விடுத்தார்.

நாம் நற்செய்தியின் தூதுவர்கள் என்பதைத்தான் புனித பிரான்சிஸ் சவேரியாரின் அழியாத தூய உடல் நமக்கு எடுத்துக்காட்டுகிறது என்றும், நமது அன்றாட வாழ்வில், ஒரு தூதுவர் என்பவர் ஒரு செய்தியைக் கொண்டு வருபவர் அல்லது எடுத்துச் செல்பவர் என்று பொருள்படுகிறது என்றும் குறிப்பிட்டார் கர்தினால் தாக்லே.

வானதூதர்கள், இறைவாக்கினர்கள் மற்றும் திருத்தூதர்கள் யாவரும் கடவுளின் நற்செய்தியை அறிவித்து ஒளிரும் மறைப்பணியாளர்கள் என்று எடுத்துக் காட்டிய கர்தினால் தாக்லே, நமதாண்டவர் இயேசுவே இறைத்தந்தையின் தலைச்சிறந்த மறைப்பணியாளார் என்றும் சுட்டிக்காட்டினார்.

அனைத்து விவிலியத் தூதர்களும், இறைவாக்கினர் எரேமியா, திருத்தூதர் பவுல் ஆகியோரை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு "கடவுளின் நற்செய்தியை மற்றவர்களுக்கும் பிற நாடுகளுக்கும் அறிவிக்க அழைக்கப்படுகிறார்கள் என்றும், அவர்களைப் பொறுத்தவரை, 'எல்லாமே கடவுளின் அன்பான அழைப்பில் தொடங்குகிறது என்றும் சுட்டிக்காட்டினார் கர்தினால்.

# துயருறுவோருக்கு எதிர்நோக்கின் அடையாளமாக இருங்கள்!

## திருத்தந்தை பிரான்சிஸ்.

யூபிலி விழாக்கள் என்பது தனிநபர்களாகவும் குழுமங்களாகவும் நம் வாழ்க்கையை மீள்பார்வை செய்துகொள்வதற்கான பொன்னான நேரங்களாக அமைந்துள்ளன என்றும், எல்லாவற்றிக்கும் மேலாக, இக்காலத்தில் தூய ஆவியார் நமக்குச் சொல்வதைச் சிந்தித்துப் பார்ப்பதற்கும், நினைவுபடுத்துவதற்கும், கேட்பதற்கும் அவை வாய்ப்புகளாக இருக்கின்றன என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இம்மாதம் 4 ஆம் திகதி நாசரேத்தின் திருக்குடும்ப சபைச் சகோதரிகளை அவர்தம் 150-ஆம் ஆண்டு யூபிலி விழாவை முன்னிட்டு திருப்பீடத்தில் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை, நீங்கள் தொடங்கியுள்ள உங்கள் யூபிலி விழாவும் திருஅவை தொடங்கவிருக்கிற யூபிலி விழாவும் ஒன்றிணைந்து செல்லவிருக்கின்றன என்றும் எடுத்துக்காட்டினார்.

இந்த முக்கியமான நிகழ்வை நீங்கள் கொண்டாடும்போது, உங்களின் கடந்த கால வரலாற்றில் நீங்கள் பெற்றுக்கொண்ட பல்வேறு கொடைகளுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தவும், உங்களின் மகிழ்ச்சியான பணிவாழ்வில் ஆன்மிக வழியில் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களையே புதுப்பித்துக்கொள்ளவும் இது நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்று நான் கருதுகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

கடவுளுக்காக உங்களின் திறந்த இதயங்கள் வழியாகவும் ஆண்டவராகிய இயேசுவுடன் உண்மையான, தனிப்பட்ட சந்திப்பின் வழியாகவும் உங்கள் துறவு சபையின் குழுமங்கள் எப்போதும் வாயில்களாக இருக்கட்டும் (காண்க யோவா 10: 7,9) என்று எடுத்துக்காட்டிய திருத்தந்தை, இதன்வழியாக உங்கள் தனிவரத்தின் மையமாக இருக்கும் குழுமங்கள் நமது மீட்பராகிய கிறிஸ்துவில் புகலிடம், நம்பிக்கை மற்றும் அமைதியைக் காணலாம் என்றும் உரைத்தார்.

இது சம்மந்தமாகப் பார்க்கின்றபோது, போர் மற்றும் வன்முறையால் சிதைக்கப்பட்ட அல்லது அவர்களின் தாயகத்திற்குள்ளேயோ அல்லது அங்கிருந்து இடம் பெயர்ந்தோ சென்றுள்ள பல குடும்பங்களை நாம் நினைவு கூராமல் இருக்க முடியாது என்றும் விவரித்துள்ளார் திருத்தந்தை.

உங்கள் இறைவேண்டல்களும், பணிகளும் இயேசுவின் அன்பை எப்போதும் பிரதிபலிக்கட்டும், இதனால் எவ்விதமான துயரங்களையும் அனுபவிப்பவர்களுக்கு எதிர்நோக்கின் அடையாளமாக இருக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவித்துத் தனது உரையை நிறைவு செய்தார் திருத்தந்தை.

## கரித்தாஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

திறந்துவைத்தார். அத்துடன் யாழ். கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை இயூயின் பிரான்சிஸ் அவர்கள் caritasvanni.org என்னும் நிறுவன இணையத் தளத்தையும் அறிமுகம் செய்துவைத்தார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உமக்கு மகிமை உண்டாகுக Laudato Si என்னும் சுற்றுமடலின் முக்கிய அம்சமாக விளங்கும் "எல்லாம் இணைந்து இருக்கின்றது" எனும் கருப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், கரித்தாஸ் தேசிய நிறுவனப் பணியாளர்கள், கிராம மட்டக் குழுக்களின் பிரதிநிதிகள், தன்னார்வ பணியாளர்கள், நிறுவன பணியாளர்களென பலரும் கலந்துகொண்டனர்.

## திருமறைக்கலாமன்ற தினமும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

செய்து வைத்தார்.அதன் பின்னர் வைரவிழா ஆண்டுப் பிரகடனத்தை நிகழ்வின் தலைவர் வாசித்ததுடன் தலைமையுரையையும் வழங்கினார்.தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரை என்பன இடம் பெற்றன. கலைநிகழ்ச்சிகளாக கலைத்தூது அழகியல் மாணவிகளின் நடனம், திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கிய "நஞ்சுண்ட கண்டன்" நாடகம், "விண்ணக வீரன்" வடமோடி நாடகம் என்பவற்றுடன், கலைஞர் கௌரவிப்பும் இடம் பெற்றன. இந்நிகழ்வுகளில் பெருமளவிலானோர் கலந்து சிறப்பித்தார்கள்

## இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ். மறைமாவட்ட ஆயரான ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொது நிலையினர் ஆகிய இறைமக்களுக்கு விடுக்கும் திருவருகைக்கால சுற்றுமடல்

AD JESUM PER MARIAM



# கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய இறைமக்களே!

### கிறிஸ்து பிறப்புக் காலம் ஈகையின் காலம்

நாம் திருவருகைக்காலத்தை இவ்வாரம் ஆரம்பிக்கின்றோம். எம் மீட்பராம் இயேசுக்கிறிஸ்துவின் வருகைக்காக எம்மைத் தயார்படுத்தும் இப்புனித மிகு காலத்தில் ஆன்மீகப் புதுப்பித்தலுடன், நம்பிக்கையின் திருப்பயணிகளாகத் திருஅவையுடன் இணைந்து யூபிலி ஆண்டில் பயணிக்க விரும்பி இம்மடலை வரைகின்றேன்.

"நம்பிக்கையின் திருப்பயணிகள்" என்னும் கருப்பொருளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அழைப்பில் யூபிலி ஆண்டு -2025 இன் நுழைவாயிலாக இத்திருவருகைக்காலம் அமைவது ஓர் சிறப்பம்சமாகும்.

இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பில் இறைத்தந்தை தம்முடைய அளவற்ற அன்பையும் மனத்தாழ்மையையும் வெளிப்படுத்துகிறார். இயேசு பாலன் தீவனத் தொட்டியில் பிறந்ததன் வழியாகத் தம்மை ஏழை எளிய மக்களுடன் அடையாளப்படுத்தியது போன்று எம்மையும் தேவையில் உள்ளோருடன் பகிர்ந்து வாழ அழைப்பு விடுக்கின்றார்.

"மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத். 25:40) என்ற இறைவார்த்தை பசி, தாகம், இரக்கம் தேவைப்படுவோருடனும், நோயுற்றோரின் தேவைகளிலும் எம்மைக் கரைத்து வாழ அழைப்பு விடுத்து நிற்கின்றது.

இறைமக்களாகிய நாம் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட்டங்களுடன் மாத்திரம் குறுக்கி விடாது நற்செயல்கள் மூலம் இக்காலத்தை பிறரன்புக் காலமாக மாற்றி அமைப்போம். கிறிஸ்து உலகிற்கு ஒளியாக வந்தார். அவரைப் பின்பற்றும் இறைமக்களாகிய நாம் ஒளியின் மக்களாக எம்மை மாற்றிப் பிறரது சுமைகளைச் சுமக்கும் சுமை தாங்கிகளாகவும், சமூகத்தின் இருள்களைக் களையும் ஒளிச் சுடர்களாகவும் அர்த்தமுள்ள வகையில் கிறிஸ்துவின் பிறப்பில் களிகூர்ந்து நம்பிக்கையின் திருப் பயணிகளாக யூபிலி ஆண்டில் பயணிப்போம்.

### யூபிலி ஆண்டு விடுக்கும் அழைப்பு

இவ்யூபிலி ஆண்டு நாம் "கிறிஸ்துவின் ஓர் உடலாக" நம்பிக்கை, எதிர்நோக்கு, பணிவாழ்வு என்பவற்றில் ஒன்றிணைந்து கூட்டொருங்கியக்க மாகப் பயணிக்க அழைப்பு விடுக்கின்றது. இவ் யூபிலி ஆண்டு, ஆன்மீகப் புதுப்பித்தல், ஒப்புரவு, நாளாந்த வாழ்வில் நற்செய்தியை நாம் வாழ்வதற் கான அருளின் காலமாக அமைய வேண்டுமெனத் திருத்தந்தை பிரான்சிஸ் அகில உலகத் திருஅவைக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

யூபிலி ஆண்டானது உரோமையில் திருத்தந்தையினால் டிசம்பர் 24, 2024 அன்று புனித பேதுரு பெருங் கோயிலில் யூபிலி தூய கதவு திறந்து வைக்கப்பட்டு ஆரம்பமாகின்றது. யாழ் மறைமாவட்டத்தில் டிசம்பர் 29ம் திகதி திருக்குடும்ப விழா அன்று யாழ் பேராலயத்தில் யாழ் ஆயர் அவர்களினால் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட வுள்ளது. அன்றைய தினம் மறைமாவட்டத்திற்குரிய யூபிலி ஆண்டுச் சிலுவை ஆசீர்வதிக்கப்பட்டு, பவனியாக எடுத்துச்செல்லப்பட்டு, பேராலயத்தில் ஸ்தாபிக்கப்படும்.

இச்சிலுவையானதுயூபிலிஆண்டுமுழுவதும்மறைக் கோட்டங்கள் ஊடாக அனைத்துப் பங்குகளுக்கும் இறைமக்களின் ஆராதனைக்காக எடுத்துவரப்படும். யூபிலி தூய கதவினூடாகச் செல்வதனால் கிடைக்கும் பலன் யூபிலிச் சிலுவையை ஆராதிப்பதன் வழியாக எமக்குக் கிடைக்கப் பெறும்.

**திருத்தந்தை நாம் யூபிலி ஆண்டில் கடைப் பிடிக்க வேண்டிய முக்கிய விடயங்களாகப் பின்வருவனவற்றைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்:**

1) நாம் விசுவாசத்தில் ஆழப்பட எமது தனிக் குடும்ப செபங்களில் இறைவார்த்தையைச் சரியான புரிதலுடன் படித்து திருவழிபாடுகளில் பங்கேற்று, அருட்சாதன வாழ்வில் ஒன்றித்துக் குறிப்பாக நற்கருணை ஒப்புரவு அருட்சாதனங்களில் இயேசு அனுபவத்தைப் பெறுதல்.
2) எமது பங்குகளிலும் நாம் வாழும் சூழலிலும் சகோதரத்துவ புரிதலுடனும், மன்னிப்பு, ஏற்றுக்கொள்ளுதலுடனும் கூட்டொருங்கியக்கத் திருஅவையாகப் பயணித்தல்.
3) பிற கிறிஸ்தவ சமூகத்துடனும், பிற சமய சகோதரர்களுடனும் ஒற்றுமையை வளர்த்து நல்லிணக்கத்துடன் உறவுப் பாலத்தை அமைத்து வாழ்தல்.
4) தேவையில் இருப்போர், ஏழைகள், துன்பப்படுவோருடன் பரிவிரக்கத்துடன் எம்மை அடையாளப்படுத்தி வாழ்தல்.
5) பிளவுகள் இருக்கும் இடங்களில் மன்னிப்பைத் தேடுவதுடன் குடும்பங்களிலும், சமூகங்களிலும், உலகிலும் அமைதி நிலவ மன்றாடுதல்.
6) இறைவனின் படைப்பாகிய இயற்கையைப் பேணிப் பாதுகாத்துப் பராமரித்தல்.

### பரிபூரண பலனை அடைய

யூபிலி ஆண்டில் பரிபூரண பலனை அடைய நாம் எமது மறை மாவட்டத்தில் உள்ள திருத்தலங்களுக்கு யாத்திரை செய்ய திருஅவை அறிவுறுத்தியுள்ளது. எமது மறைமாவட்டத்தில் உள்ள புனித லூர்து அன்னை பதி - தும்பளை, புனித பற்றிமா அன்னை ஆலயம் - பண்டத்தரிப்பு, சிந்தாத்திரை அன்னை ஆலயம் - சாட்டி, செபமாலை அன்னை ஆலயம் - சின்ன மடு, புனித ஜோசவ்வாஸ் திருத்தலம் - சில்லாலை, புனித அந்தோனியார் ஆலயம் - மானிப்பாய், புனித செபஸ்தியார் ஆலயம் - புல்லாவெளி, குழந்தை இயேசு ஆலயம் - புதுக்குடியிருப்பு, புனித அக்னஸ் ஆலயம் - மாங்குளம், கல்வாரிப் பூங்கா - வவுனிக்குளம், புனித அந்தோனியார் ஆலயம் - அளம்பில் போன்ற யாத்திரைத் தலங்களுக்கு இறைமக்கள் யூபிலி ஆண்டில் திருயாத்திரை செய்யப் பரிந்துரைக்கின்றேன். உரோமாபுரிக்குத் திருப்பயணம் செய்யவும் திருஅவை பரிந்துரைக் கின்றது.

### குழுக்களாக யூபிலி ஒன்றுகூடல்கள்

பங்கு மட்டத்திலும், மறைக்கோட்ட மட்டத்திலும், மறைமாவட்டமாகவும் சிறுவர்கள், இளையோர், பெற்றோர், மறையாசிரியர்கள், குருக்கள், துறவிகள், இடம்பெயர்ந்தோர், சிறைக் கைதிகள், தொழிலாளர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு சிறப்பான நாட்கள் ஒதுக்கப்பட்டு விசேட கருத்தமர்வுகளும், நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்படும்.

யூபிலி ஆண்டானது யாழ் மறைமாவட்டத்தில் டிசம்பர் 28, 2025 அன்றும், அகில உலகத் திருஅவையில் ஜனவரி 6, 2026 அன்றும் நிறைவடையும்.

### அரசியலில் புதிய மாற்றம்

நடந்தேறிய இரு தேர்தல்களிலும் மக்கள் மாற்றம் வேண்டிய ஓர் அரசியலை எதிர்பார்த்துப் புதியதொரு அரசாங்கத்தைப் பல எதிர்பார்ப்புக்களுடன் தெரிவு செய்துள்ளனர். இம்மாற்றத்திற்கான காரணம் ஊழல்மிகு அரசியல்வாதிகளை ஓரம்கட்டி, உண்மைக்காகவும், நீதிக்காகவும் அர்ப்பணத்துடன் பணியாற்றக்கூடியவர்களை மக்கள் விரும்புகின்றார்கள் என்பதாகும்.

மக்களின் எதிர்பார்ப்பைப் புதிய அரசாங்கம் கருத்திற்கொண்டு செயற்படுவதன் வழியாக, எமது மண்ணில் நிலையான அமைதியும், பொருளாதார மேம்பாடும் செழித்தோங்க, பிறக்கவிருக்கும் பாலக இயேசு அருள்கூர வேண்டுமென ஆசித்து நிற்கின்றேன்.

*கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள,*
**பேரருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
**யாழ். மறைமாவட்ட ஆயர்**

---

# திருவருகைக் காலம்

அருட்பணி எம்.எல்.தயாகரன்



திருவழிபாட்டு ஆண்டானது திரு அவையின் மரபிற்கும் ஒழுங்கிற்கும் ஏற்ற வகையில் பலவாறாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் திருவருகைக் காலம், கிறிஸ்து பிறப்புக் காலம், பொதுக்காலம், தவக் காலம், பாஸ்காக்காலம் என்பன இதில் அடங்கியுள்ளன. திருவழிபாட்டு ஆண்டுச் சக்கரம் திருவருகைக் காலத்தோடு ஆரம்பிக்கின்றது.

திருவருகைக் காலம் என்பது திருஅவையின் நம்பிக்கையாளரின் தயாரிப்புக் காலமாக அமைகின்றது. இக்காலம் இரண்டு பண்புகளைக் கொண்டுள்ளன.

**1) இறைவன் மனிதரிடையே வந்ததமையை நினைவு கூரும் இயேசு பிறப்புப் பெருவிழாக் கொண்டாட்டங்களின் தயாரிப்புக் காலம்.**

**2) காலத்தின் நிறைவில் நிகழும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருக்க உள்ளங்கள் தூண்டப்படும் காலம்.**

எனவே திருவருகைக்காலம் இறைபற்றும், மகிழ்ச்சியும் நிறைந்த எதிர்பார்ப்பின் காலமாக விளங்குகின்றது.

இக்காலம் நவம்பர் முப்பதாம் திகதி அல்லது அதற்கு அண்மையில் வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் மாலைத் திருப்புகளோடு ஆரம்பித்து, கிறிஸ்து பிறப்பு விழாவின் முதல் மாலைத் திருப்புகழுக்கு முன் முடிவடையும்.

இக்காலமானது நான்கு வாரங்களைக் கொண்டுள்ளது. இதில் வரும் நான்கு ஞாயிறு தினங்களும், மீட்பர் வருவதற்கு முன் கடந்து சென்ற நான்காயிரம் (4000) ஆண்டுகளைக் குறிக்கின்றன.

**1) படைப்பு ஆதாம் முதல் நோவா வரை ஆயிரம் ஆண்டுகள்**
**2) நோவா முதல் ஆபிரகாம் வரை ஆயிரம் ஆண்டுகள்**
**3) ஆபிரகாம் முதல் தாவீது வரை ஆயிரம் ஆண்டுகள்**
**4) தாவீது முதல் இயேசு வரை ஆயிரம் ஆண்டுகள்**

இக்காலத்தின் நான்கு ஞாயிறு தினங்களிலும் எமது சிந்தனைக்கு உதவியாக நான்கு மையக் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.

**முதல் வாரம் - நம்பிக்கை**
**இரண்டாம் வாரம் - அமைதி**
**மூன்றாம் வாரம் - மகிழ்ச்சி**
**நான்காம் வாரம் - அன்பு**

திருவருகைக் காலத்தில் ஊதா நிறத் திரு உடை பயன்படுத்தப்படுகின்றது. ஊதா நிறம் பாவத்தின் அடையாளமாகும்.


திருவருகைக்காலம் கிறிஸ்துவின் பிறப்பு மற்றும் அவரின் இரண்டாம் வருகைக்கான எமது தயாரிப்புக் காலமாக இருப்பதாலும், தவமிருந்து விழிப்போடு செபித்து எம்மைத் தயார்படுத்த நாம் அழைக்கப்படுவதாலும் ஊதா நிறம் விசேடமான முறையில் அடையாளப்படுத்தப்படுகின்றது.

எனினும் திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு "மகிழுங்கள் ஞாயிறு" என அழைக்கப்படுவதால் இளஞ்சிவப்பு நிற உடையைப் பயன்படுத்தலாமெனத் திருஅவை நமக்குப் போதிக்கின்றது.

அத்தோடு இக்காலத்தின் தன்மைக்கேற்ப பீடத்தை மிதமான அளவில் மலர்களால் அணி செய்யவும், இசைக் கருவிகளையும் மிதமான அளவில் பயன்படுத்தவும் திருஅவை எமக்கு அறிவுறுத்துகின்றது.

எனவே, இத்திருவருகைக் காலத்தில் மேற்கூறிய இருபெரும் நிகழ்வுகள் பற்றித் தியானித்து, இறைவேண்டலிலும், தவத்திலும் ஈடுபடத் திருஅவை எம்மைத் தூண்டி நிற்கின்றது.

# கற்பனை காவிய நம்பிக்கை



ஆழமான, அழுத்தமான அன்பு வழியும் விழிகளுடன் என்னைப் பார்க்கும் இயேசு. உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன் எனத் துயர விழிகளுடன் என்னைக் கேட்கும் இயேசு. வலுவிழந்த ஆட்டுக்குட்டியாய் என்னை மார்போடணைத்து ஆறுதல் தரும் இயேசு. பொன் முடியணிந்து, செங்கோல் கரம் ஏந்தி அரசர்க்கரசராய் பேரரசை நிறுவிய இயேசு. கடவுளின் மகனாய், மூவொரு கடவுளின் ஓர் ஆளாய் தெய்வீகக்களை வீசும் இயேசு. அன்புக் கனலாய் எரிந்து கொண்டிருக்கும் திரு இதயத்தைச் சுட்டிக் காட்டும் இயேசு. கதவைத் தட்டும் இயேசு. கதவைத் திறந்து வரவேற்கும் இயேசு. சிறுவர்களுடன் இயேசு. குழந்தையான இயேசு. அன்னையுடன் இயேசு. சிலுவையில் தொங்கி மரணித்த இயேசு என நாம் ஆயிரக்கணக்கான இயேசுவின் திருவுருவங்களைப் பார்க்கிறோம் அல்லவா.

இரண்டாயிரம் வருடங்களாக மிகப் பெரிய நம்பிக்கையாய் உலகில் வேரூன்றி, வளர்ந்து, கிளை பரப்பி இன்னும் பல நூற்றாண்டுகள் வாழப் போகும் கிறிஸ்தவ மறையின் மெய்ப்பொருளான இயேசுவிற்கு இன்றைய உருவை யார் கொடுத்தார்? இயேசுவின் அருகிருந்து உடன் பயணித்தவர் இத் திருவுருவை வரைந்திருப்பாரோ? அல்லது அற்புதமாய் வெளிப்பட்ட யாரோ ஒரு ஓவியனின் கைத்திறனோ? இத் திருவுருவின் பூர்வீகம் என்ன? புதுமைகள் என்ன?

மேற்குலக ஓவிய வரலாற்றில் மூன்றில் ஒரு பங்கு ஓவியங்கள் இயேசுவின் திரு உருவப் படங்களால் நிறைந்துள்ளது. திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் உருவ வழிபாடு இருக்கவில்லை. இயேசுவின் வாழ்வு, இறப்பு மற்றும் உயிர்ப்பின் பின் இயேசுவின் சிந்தனைகளை விடாப்பிடியாக உலகின் கடை எல்லை வரை காவிச்சென்ற இயேசுவின் சீடர்கள், எவ்வாறு இயேசுவின் திரு உருவ நம்பிக்கையை ஏற்படுத்தினார்கள். கலை விமர்சகர், கலாயோகி ஆனந்தக்குமாரசாமி அவர்கள் குறிப்பிடுவது போல "இறை படிமங்களின் நோக்கம் ஆழ்ந்த சிந்தனைக்கான ஊன்றுகோலாகவே அமைகிறது." என்ற வகையில் ஏராளமான இயேசுவின் படிமங்கள் இறை வழிபாட்டை ஆழப்படுத்தவும், இறை நம்பிக்கையை தலைமுறை தோறும் காவிச்செல்லவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது,




தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் அச்சம் காரணமாகத் தமது வழிபாடுகளை மறைவிடங்களிலேயே நடத்தி வந்தனர். நிலக் கீழ்க் கல்லறைத் தொகுதிகளே வழிபாடு செய்வதற்கான மறைவிடங்களாகக் காணப்பட்டன. கி.பி. 3ம் நூற்றாண்டு வரை இயேசுவின் உருவம் வழிபாட்டின் மையமாக இருக்கவில்லை எனினும் இயேசுவை அடையாளப்படுத்தும் வகையில் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இறந்தவர்களை கல்லறைகளில் அடக்கம் செய்து பளிங்குக் கற்களால் கல்லறைகளை மூடியபோது அவற்றில் பொறிக்கப்பட்ட குறியீடுகள் இயேசுவைக் குறிப்பவையாகவும், இன்றுவரை நிலை பெற்ற கலைத்துவப் பண்புள்ளனவாகவும், வழிபாடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

மீன், மற்றும் நம்பிக்கையின் அடையாளமான நங்கூரம், முதலும் முடிவும் என்பதைக் காட்டும் அல்பாவும், ஒமேகாவும், **PX** என்ற எழுத்துக்கள், பலியாடாகச் சித்த ரிக்கப்படும் செம்மறியாட்டுக் குட்டி, திராட்சைக் கொடி போன்றவை இன்றுவரை நிலை பெற்றுள்ள குறியீட்டு வடிவங்களாகும்.

புராதன Dura Europos நகரில் கி.பி. 3ம் நூற்றாண்டில் தாடியற்ற உரோம இளைஞனின் நல்லாயன் வடிவ ஓவியம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே இயேசுவின் முதலாவது திரு உருவப் படமாகக் கருதப்படுகிறது. கி.பி. 4ம் நூற்றாண்டில் கொண்ஸ்ரன்ரைன் அரசன் கிறிஸ்தவத்தைத் தழுவிய பின் கிறிஸ்தவம் ஆட்சி மதமாக, அரச மதமாக மாறிய கட்டத்தில் கிறிஸ்துவின் ஆளுமைப் பிம்பங்கள் ஏராளமாக வெளிப்படத் தொடங்கின. இக் காலப் பகுதியிலேயே தாடியுடன் தோள்வரை நீண்ட முடியுடன் தெய்வீகத் தன்மையைக் குறிக்கும் ஒளிவட்டத்துடன் இயேசு சித்தரிக்கப்படுகிறார்.

கி.பி. 8ம் நூற்றாண்டில் வாய்மொழிப் பாரம்பரியத்தினூடாக "வெரோணிக்காவின் வெண்துகில்" அறிமுகமாகிறது. கி.பி. 1300களில் இருந்து பிரபல்யம் பெற்றிருந்த இத்திருமுகம் கி.பி. 1505ல் இயேசுவின் நிலையான, சாந்தமான, அருள் பொழியும் முகமாக வெளியிடப்பட்டு கிறிஸ்தவர்களின் நம்பிக்கையின் ஊன்றுகோலாயிற்று.

முன்புறமும், பின்புறமும் மங்கிய நிலையில் பதியப்பட்ட இயேசுவின் திருவுடல் சுற்றப்பட்ட டூரின் ஈமத்துணி கி.பி.1260-1390 காலப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டு, பிரபல்யமான இயேசுவின் திருமுகச் சாயலுடன் கூடிய உடலம் ஆய்விற்குட்படுத்தப்பட்டது.



இவை அனைத்திலும் 33 வயது யூத இளைஞனின் ஒரே வகையான முகச்சாயல் காணப்படுவது உறுதிப்படுத்தப்பட்டது. இயேசுவின் இருமை நிலையை அதாவது அரசர்க்கெல்லாம் அரசரான இயேசுக் கிறிஸ்து, அனைவராலும் இகழ்ந்து புறக்கணிக்கப்பட்ட துன்புறும் இயேசுக் கிறிஸ்து என ஓவியக் கலைஞர்களால் படைக்கப்பட்டமை இயேசுவின் திரு உருவ வரலாற்றின் மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ் வகையில் இயேசுவின் இருமை நிலையை வெளிப்படுத்தும் சிறப்பான ஓவியம் மூன்று ஞானிகள் குழந்தை இயேசுவை வணங்கும் ஓவியமாகும். "Benedetto Bonfigili" எனும் ஓவியம் கி.பி.15ம் நூற்றாண்டில் பிரபல்யம் அடைந்துள்ளது.

இன்றைய நவீன தொழிநுட்ப யுகத்தில் **AI** தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி வரையப்படும் இயேசுவின் திரு உருவங்கள் மற்றுமோர் பரிணாமத்தைப் பெற்றுள்ளன. காலங்களைக் கடந்த இயேசு மாற்றங்களை உள்வாங்கி எமது நம்பிக்கையின் சின்னமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**பப்சி மரியதாசன்**



## உண்மையின் அரசரே வருக! நிலையான ஆட்சி தருக!

**அருட்பணி ஜெ.ஞானசேகரன்**

நாம் இன்று கிறிஸ்து அரசர் திருநாளைக் கொண்டாடுகிறோம். திருவழிபாட்டு ஆண்டின் இறுதி ஞாயிறும் இன்றுதான். கிறிஸ்து அரசர் திருநாளை, திருத் தந்தை 11 -ஆம் பயஸ் அவர்கள் 11-12-1925 அன்று 'Quas Primas' என்ற சுற்றுமடல் வழியாக நிறுவினார். அது ஒக்டோபர் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை கொண்டாட வேண்டுமெனப் பணித்தார். 1960-ஆம் ஆண்டு வழிபாட்டு அட்டவணையைத் திருத்தம் செய்த திருத்தந்தை 23-ஆம் ஜான் இவ்விழாவை முதன்மை விழாவாகத் தரம் உயர்த்தினார். 1969-ஆம் ஆண்டு திருத்தந்தை 6-ஆம் பால் வெளியிட்ட 'Mottu Proprio' என்ற மடலின் வழியாக இந்த விழாவின் பெயரை "கிறிஸ்து அனைத்துலகின் அரசர்" என மாற்றினார். மேலும், வழிபாட்டு ஆண்டின் கடைசி ஞாயிறு கொண்டாடச் சில மாற்றங்களை உருவாக்கினார்.

2020-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிறிஸ்து அரசர் திருநாள் திருப்பலியை வத்திக்கானில் நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அத் திருப்பலியின் இறுதியில், "2021 ஆம் ஆண்டு கிறிஸ்து அரசர் திருநாளோடு உலக இளைஞர் நாளும் இணைத்துச் சிறப்பிக்கப்படும்" என்று அறிவித்தார். திருத்தந்தை புனித 2-ஆம் ஜான்பால் அவர்களால் உருவாக்கப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் புனித வாரத்தின் முதல் நாளான குருத்தோலை ஞாயிறன்று சிறப்பிக்கப்பட்டு வந்த உலக இளைஞர் நாள், தற்போது கிறிஸ்து அரசர் திருநாளன்று சிறப்பிக்கப்பட்டு வருகின்றது. "ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ ஓடுவர் களைப்படையார்" (காண். எசா 40:31) என்பது இந்நாளில் நாம் கொண்டாடும் உலக இளைஞர் நாளின் மையப்பொருளாகும்.

திருத்தந்தை 11ஆம் பயஸ் இவ் விழாவை முதன்முதலில் ஏற்படுத்த முக்கிய காரணம், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட உலகப்போர்கள், கிறித்தவத் தன்மை விலகி சர்வாதிகார மனநிலைகள் எழுந்தன. பல இடங்களில் கிறித்தவ நம்பிக்கையாளர்கள் அடக்குமுறையைச் சந்தித்தனர்.

முதலாம் உலகப்போர் முடிந்தாலும், உலகத்தில் பகைமை, பழிவாங்கும் வெறி அடங்கவில்லை.திரு அவையின் அதிகாரம் கேள்விக்குள்ளானது. கிறித்தவம் கலக்காத ஆட்சி அமைக்கப் பல ஐரோப்பியத் தலைவர்கள் முனைந்தனர். கடவுள் அந்நியப்பட்டுப் போனார். இந்நிலையில், திருத் தந்தை 11-ஆம் பயஸ், இந்தக் கொடுங்கோல் மனம் கொண்ட தலைவர்கள், அரசர்களுக்கு அடையாளமாக, கிறிஸ்துவை அரசராக அறிவித்தார்.

இயேசு வாழ்நாளில் தம்மை ஓர் அரசராகக் காட்டிகொண்டதில்லை. பதவியை அவர் வலிந்து கட்டிக்கொண்டதுமில்லை. அரசராகக் கொண்டாடப்பட வேண்டியவர் பிலாத்து முன் தீர்ப்புக்காக ஒரு விசாரணைக் கைதியாக நிற்கிறார். அவர் எப்படி ஓர் அரசராக இருக்க முடியும்? அவர் அரசர் என்றால் அவரது அரசு எத்தகையது? யார் அவருடைய ஆட்சிக்குரிய மக்கள்? அரண்மனையே அடைக்கலம் என வாழ்ந்த அரசர்கள் மத்தியில் இயேசுவின் ஆட்சி வேறுபட்டிருக்கக் காரணம் என்ன? போன்ற வினாக்கள் எம்முன் எழுகின்றன. இவற்றிற்கெல்லாம் இந்நாள் விடையளிக்கிறது.

இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் தானியேல் கடவுளின் நிலையான, அழிக்க முடியாத அரசு வானத்தின் மேகங்கள்மீது இறங்கி வருவதையும், ஏனைய கொடுங்கோல் அரசுகளை வெல்வதையும் காண்கிறார். அவர் கண்ட காட்சியில் குறிப்பிடும் தொன்மை வாய்ந்தவர் கடவுளே! அவரே எல்லா அரசுகளுக்கும் அதிகாரம் அளிப்பவர் தீர்ப்பும் வழங்குபவர். அவர் அருகில் இருப்பவர் இயேசுக்கிறிஸ்து என விளக்கம் பெறுகிறோம்.

"கிறிஸ்து" என்ற கிரேக்கச் சொல்லுக்கும், "மெசியா" என்ற எபிரேயச் சொல்லுக்கும் "திருப்பொழிவு செய்யப்பட்டவர்" என்பது பொருள். இஸ்ரயேல் வரலாற்றில் அரசர்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எனவே,

இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர்கள் திரு எண்ணெயால் திருப்பொழிவு செய்யப்படுவது வழக்கம். இங்கே கடவுளே திருப்பொழிவு செய்த புதிய அரசர் இயேசு. அவர் நிறுவிய ஆட்சியே இறையாட்சி. இயேசு நிறுவிய ஆட்சியில் இராணுவம் கிடையாது. எனவே, போர் தொடுப்பது இல்லை. அவர் நிறுவிய ஆட்சிக்கு நிலப்பரப்புக் கிடையாது. எனவே, நிலத்தைக் காக்கக் கோட்டைக் கொத்தளங்கள் தேவையில்லை. "வரி" என்ற பெயரில் மக்களைச் சுரண்டவேண்டிய அவசியமும் இல்லை. யாரையும் அடக்கவோ, ஒடுக்கவோ தேவையில்லை. மாறாக, மதிப்பீடுகளின் அடிப்படையில் இயேசு கட்டியமைத்த ஆட்சியே இறையாட்சி. அங்கு அதிகாரம் அல்ல. சேவையே முக்கியம். சொத்துகளைக் குவிப்பது அல்ல. தன்னை இழப்பதே மையம். அன்பு, அமைதி, மகிழ்ச்சி, சமத்துவம், சகோதரத் துவமே தமது கொள்கை என எங்கும் முழங்கினார். "உண்மையை எடுத்துரைப்பதே தமது பணி" என்று சொல்லி, பணி விடை பெற வந்த அரசர்கள் மத்தியில் தம்மைப் பணிவிடை புரியும் ஒரு தொண்டனாக அடையாளப்படுத்தி ஏழ்மையின் அரசாட்சியை நிறுவினார்.

இயேசு நிறுவிய ஆட்சிக்கு இறைவன் ஒருவரே தேவை. அவர் ஒருவரே போதும் என்று சொல்லக்கூடிய மக்களின் மனங்களில்தான் இந்த ஆட்சி அமையும். இயேசுவின் ஆட்சியில் "யார் பெரியவர்?" என்ற கேள்விக்கு இடமில்லை. எல்லாருக்குமே இயேசுவின் ஆட்சியில், அவரது அரியணையில் பங்கு உண்டு. எல்லாரும் சமமே. இங்கே அரசன் என்றும், அடிமை என்றும் வேறுபாடுகள் இல்லை. "எல்லாரும் ஒரு குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் மன்னர்கள்" என்று பாரதி கண்ட சமத்துவச் சமூகமே இயேசுவின் இறையாட்சிச் சமூகம்.

இயேசுவுக்கு எதிரான முக்கிய குற்றச்சாட்டு அவர் தம்மையே ஓர் அரசராக ஆக்கிக்கொள்கிறார் என்பதுதான். இந்தக் குற்றச் சாட்டு உரோமைப் பேரரசுக்கு எதிரான பெருங்குற்றம், துரோகம் ஆகும். இதுவே அவரது கொலைக்குக் காரணமாக அவரது சிலுவையின்மேல் எழுதி வைக்கப்பட்ட குற்றச்சாட்டு.

எனவே, இயேசுவின்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை உறுதிசெய்யும் நோக்கில்தான் சீசரின் கைப்பொம்மையாக இருக்கும் பிலாத்து இயேசுவிடம், "நீ யூதரின் அரசனா?"

(தொடர்ச்சி 5ம் பக்.)

## உண்மையின் அரசே வருக....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

என வினவுகிறார் (லூக் 18:33). பிலாத்து நினைக்கும் முறையிலான அரசர் அல்லர் இயேசு. அவரிடம் ஆயுதங்களும் இல்லை, ஆட்பலமும் இல்லை. அவர் உரோமை அரசுக்குப் போட்டி அரசரும் அல்லர். அவரது ஆட்சி வேறுபட்டது. அவரது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல (18:36). அது இறை உலகு சார்ந்தது. அது அன்பு, நீதி, அமைதி, மகிழ்ச்சி போன்ற இறையாட்சியின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டது. அது வாழ்வின் அரசு. இத்தகைய அரசுக்கு இயேசுவே தலைவர். இப்பொருளில் இயேசு ஓர் அரசரே. "நீ யூதரின் அரசனா?" என்ற பிலாத்துவின் கேள்விக்கு இயேசு நேரடியாகப் பதில் கொடுக்கவில்லை. தாம் ஓர் அரசர் என்றால் பிலாத்து அதனைச் சரியாகப் புரிந்துகொள்ளமாட்டார். யூதரின் குற்றச்சாட்டு உண்மையென நினைத்துக்கொள்வார். தாம் ஓர் அரசர் இல்லை என்றால், அது தம் அரச நிலையை மறுப்பது போலாகிவிடும். எனவே, எந்தவித நேரடிப் பதிலையும் தராமல், "அரசன் என்று நீர் சொல்லுகிறீர்" (18:37) எனப் பதிலளித்து, உண்மையை நிலைநாட்டி, மக்களுக்கு வாழ்வு வழங்கும் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதே தம் பணி என அழுத்துக் கூறுகிறார்.

தன் மனசாட்சியும், மனைவியும் கூறும் உண்மைகளையும் காண மறுத்து, எப்போது தன் பதவி போய்விடுமோ என்ற பயத்தில், அரியணையில் தன்னையே இறுக்கமாக அறைந்துகொண்ட பிலாத்துவைப்போல ஆயிரமாயிரம் தலைவர்களை நாம் அறிவோம். கொள்கை என்ற பெயரில், மதம் என்ற பெயரில், இவ்வுலகில் இவர்கள் விதைப்பதெல்லாம் வெறுப்பும்,வேதனையும்தான். சுயநலமற்ற அரசர்களையோ, தலைவர்களையோ காண்பது மிக அரிது.

**நிறைவாக,** கிறிஸ்துவை அரசர் என்று கொண்டாடும் நாம், நம்மை அடிமைகளாக்கி, நம்மைச் சுரண்டுவதில் சுகம் கண்டு, பதவி புகழே நிரந்தரம் என வாழும் தலைவர்களை இனங்கண்டு, அவர்களைத் துதிபாடும் மன நிலை நம்மிடமிருந்து களைய உறுதியேற்போம். உண்மையானவர்களை அடையாளம் கண்டு, அவர்களுடன் இணைந்து உழைக்க முன்வருவோம். இவ்வுலகப் புகழையும், மகிமையையும் அதிகாரத்தையும் விரும்பாதது தம் அரசு என்று இயேசு வெளிப்படையாகக் காட்டுவதைக் காணும் நாம், பிறருக்கு ஆற்றும் பணியில் மகிழ்ச்சி காண்போம்.

நாம் ஒவ்வொரு வரும் நம் இதய அரியணையில் இயேசுவை அரசராக அமர வைத்து, உண்மைக்குச் சான்று பகர்ந்து, நீதிக்குக் குரல் கொடுக்கும் கிறிஸ்து அரசரின் ஆட்சிக்குரிய மக்களாக வாழ விண்ணக அரசியாம் அன்னை மரியா நமக்கு உதவி புரியட்டும். இளைஞர்கள் கிறிஸ்துவின் தலைமைத்துவத்தை ஏற்று, எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக இவ்வுலகைக் கட்டியெழுப்ப வேண்டும் என அனைத்துலக அரசராம் கிறிஸ்துவிடம் மன்றாடுவோம்.

### எல்லோரும் இன்புறட்டும்

சத்தியமே வெற்றிகாண
நித்தமும் உழையுங்கள்.

நல்வார்த்தை பேசும்
நாவுகள் பெருகட்டும்!

பொல்லாதோர் எல்லோரும்
நல்லோர் ஆகட்டும்!

இல்லாமை இல்லாத
நிலையே மலரட்டும்!

கல்லாதோர் இல்லாத
நிலையே கலையட்டும்!

விழிநீர் துடைக்கும்
கரங்களாக மாறிடுவீர்.

பரிவன்பைச் சுமக்கும்
கால்களாக ஆகிடுவீர்.

தொடுகை உணர்வினால்
வானம்நோக்கி எழுந்திடுவீர்.

வருந்திவாழும் நெஞ்சங்களைத்
தேடித்தேடி அலைந்திடுவீர்.

நல்லோர் இதயங்களில்
எல்லோரும் இன்புறட்டும்!

அருட்பணி வின்சன் பற்றிக்

---

**தமிழர் மத்தியில் கிறிஸ்தவத்தின் பணியைச் சர்வமதச் சூழலில் சிறப்பிக்க விளைகின்றேன்.**

அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்

**ஒரே ஒளி முக்கோணக் கண்ணாடியினூடாக (Prism) பல்வேறு நிறங்களாகத் தோன்றுவதுபோல் ஒரே இறைவனிடமிருந்து பல பண்பாடு மதங்கள் மனித வாழ்விற்காக இயங்குகின்றன. இவைகளெல்லாம் அதே இறைவனில் முற்றுப்பெறும்**

## எல்லா மதங்களின் ஊற்றும், நோக்கமும், முடிவும் ஒன்றே

**அத்தியாயம் 1**

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

**1.4 : இறை நம்பிக்கையுடைய மதங்களையே தமிழர் பின்பற்றுகின்றனர்**

தமிழர்கள் பின் பற்றும் 3 மதங்களும், மதங்களாக வேறாக இருந்தாலும், வெவ்வேறு செப வழிபாடுகள் ஆராதனைகள் ஆலயங்களிலே நடந்தாலும், வெவ்வேறு இடங்களில் நேரக்களில் பக்தர்கள் கூடினாலும், ஒரே இறைவனையே நம்பி, மேற் கூறப்பட்ட பொதுப் பண்புகளைக் கொண்டுள்ளன. ஆகையினால் எமக்குள்ளே பரஸ்பரப் புரிந்துணர்வுக்கும், உறவுக்கும் ஒன்றாகக் கடமைகள் செயற்பாடுகளுக்காக பல ஆயத்தப் பண்புகளை மூன்று மதங்களிலும் ஊக்கப்படுத்தும் தேவை பிறந்திருக்கின்றது. துரதிஷ்டவசமாக அப் பண்புகளைக் கொண்டிருந்தும், நாம் கடந்த காலத்தில் தமிழருடைய நலனுக்காகப் போதிய அளவு பணி ஆற்றவில்லை.

**1.5 : தமிழர் பெரும்பான்மையானோர் இந்து-சைவ மக்கள், ஏனையோர் இஸ்லாமியர் கிறிஸ்தவர்**

இந்து மதம் மிக மிகப் பழமையானது. இந்தியக் கண்டத்தின் பல்வேறு நாகரீகங்கள் கலை பண்பாடுகளுடன் பின்னிப் பிணைந்து, ஆயிரமாயிரம் ஆண்டுகள் வளர்ந்தது. அதில் இந்தியாவின் தென் பகுதியில் வாழும் தமிழர்கள், தெய்வங்களில் சிவபெருமானுக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்ந்த சைவத்தையே பின்பற்றுகின்றனர்.

ஆரம்பத்தில் சைவ - தமிழராகவே இருந்தவர்களில் சிலர், பிந்திப் புகுந்த இஸ்லாமியக் கிறிஸ்தவ மதங்களுக்கு மாறி இருக்கின்றனர்.

இந்து-சைவத்தை போலல்லாது, 2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கிறிஸ்தவமும் 1300 ஆண்டுகளுக்கு முன்தோன்றிய இஸ்லாமும், தமிழர் மத்தியில் பின் தோன்றிய மதங்களே. இந்த மதங்களுக்கு இந்து - சைவ மக்கள் மாறிய முறைகளில், பல கசப்பான சரித்திர நிகழ்வுகள் நடந்து இருக்கின்றன. ஆனால் இக் கசப்பான நிகழ்வுகளைத் தாண்டி, இன்று மூன்று மத பக்தர்களும் சமாதானமாக வாழ்கின்றோம். இறைவனுக்கு நன்றி.

**1.6 : மனிதத்துவத்திற்கான பணிகள் மக்களையும் மதங்களையும் சிறப்பித்து ஒற்றுமைப்படுத்தும்**

பக்தர்களின் சிந்தனையைத் தூண்டி, நல்ல மனித வாழ்விற்கு வழிகளைக் காட்டுவதே மதங்களின் பிரதான நோக்கம். அதற்காக ஒவ்வொரு மதமும், தமது நம்பிக்கை வழிபாடுகள் திரு விழாக்களை சுதந்திரமாக நடாத்தி, பக்தர்களின் ஆன்ம பெலத்தை யும், எல்லா மனிதருக்கும் நன்மை செய்யும் ஆர்வத்தையும் பெருக்கி வாழச் செய்வதே இலட்சியமாகக் கொள்ளவேண்டும். மத எல்லைக்குள்ளே நடக்கும் சடங்குகளிலே மாத்திரம் கவனம் செலுத்துவது அல்லது மிதமிஞ்சிய முக்கியத்துவத்தைத் தூண்டுவது மதங்களுக்கிடையில் பிரச்சினையைக் கொண்டு வரும்.

**1.7 : மதபக்தர்கள் தயக்கமின்றி மனித நலனுக்காகச் செய்யக்கூடிய பணிகளைப் பற்றிக் கலந்துரையாடலாம்**

மதங்கள் மனிதர்களின் நலனுக்காக மனிதரினால் உண்டாக்கப்பட்டு, போதனைகளும் வழிபாட்டு இடங்களும் சடங்குகள் செபங்களும் உருவாக்கப்படுகின்றன. இவைகளின் அடிப்படை நோக்கு மனிதன் உலக வாழ்வில் இறை நோக்கத்திற்கிணங்க சீராய் நடந்து, இவ்வுலக வாழ்வின் பின் இறைவனடி சேர்வது. இதற்கு இணங்கவே எமது மதத் தலைவர்கள் மதங்களை வழி நடத்துகின்றனர்.

ஆகையினால் எவ்வித தயக்கமும் இன்றி, தமிழ் மக்களுடைய பொதுத் தேவைகள் பிரச்சினைகளைத் தீர்க்க மத பக்தர்கள் வழிகளைத் தேடலாம். *(தொடரும்...)*

---

# அது எனக்குத் தெரியுமே!

ஒரு சிற்பி ஒரு பெண்ணின் சிலையை எட்டு மாதங்களாகப் பார்த்துப் பார்த்துச் செதுக்கிக் கொண்டிருந்தார்.சிலை முழுவதும் மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்டு விட்டது. பார்ப்பதற்கு மிக அழகாக, மிகக் கவர்ச்சியாக உயிர்த் துடிப்புடையதாக அந்தச் சிற்பம் அமைந்திருந்தது. ஆனால் சிற்பிக்கு ஒரு மனக்குறை இருந்தது. அவர் செதுக்கிய சிற்பத்தில் ஒரு சிறிய தவறு இருப்பதாக அவருடைய மனசுக்குள் ஒரு குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

அவர் செதுக்கிய பெண் சிலையின் தலை முடிப் பகுதியை இரட்டைப் பின்னலோடு செதுக்கியிருந்தார்.அந்த இரட்டைப் பின்னலின் ஒரு பக்கத்தில், பின்னல் இழைகளில் ஒரு சிறிய தவறு நேர்ந்து இருந்தது. சிலை செதுக்கப்பட்டு முடிந்ததை அறிந்த ஆலய நிர்வாகத்தினர் அந்தச் சிற்பியிடம் வந்து அந்தச் சிலையைக் கோவில் கோபுரத்தில் வைப்பதற்காக தங்களிடம் தருமாறுகேட்டுக் கொண்டார்கள். ஆனால் அந்தச் சிற்பியோ அந்தச் சிலையை அவர்களிடம் கொடுப்பதற்கு மறுத்து விடுகிறார்.

அந்த ஆலய நிர்வாகத்தினர், “அப்படியானால் நீங்கள் என்ன முடிவு செய்திருக்கிறீர்கள். நாம் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்” என்று கேட்டபோது, “ கொஞ்சம் பொறுங்கள் இன்னும் எட்டு மாதங்கள் எடுத்து மீண்டும் அதே சிலையைப் புதிதாகச் செதுக்கப் போகிறேன்” என்றார்.

கோவில் நிர்வாகத்தினர் சிற்பியிடம் சொன்னார்கள், “ஐயா, நாங்கள் இந்தச் சிலையை நம்முடைய நூற்று ஐம்பது அடி உயரம் உள்ள கோவில் கோபுர உச்சியில்தான் வைக்கப் போகிறோம். கீழிருந்து கோபுரத்தைப் பார்க்கிற யாருக்கும் இந்தப் பின்னலில் உள்ள சிறிய தவறு ஒரு பொழுதுமே தெரியாது” என்று மிக உறுதியாகக் கூறினார்கள்.

அப்போது அந்தச் சிற்பி சொன்னார், “கடந்து போகிற யாருக்கும் அந்தத் தவறு தெரியாது என்பது உண்மைதான். ஆனால் கடந்து போகிற ஒவ்வொரு தடவையும் எனக்குத் தெரியுமே. ஒரு தவறோடு இந்தக் கோபுரம் நிற்கிறது என்று என் மனம் எனக்கு மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்குமே. என் ஒருவனின் தவறால் இந்தக் கோபுரம் மொத்தமும் தவறாக இருப்பதாக உணரக்கூடுமே.

எனக்கு ஒரே ஒரு வாய்ப்புக் கொடுங்கள் சரி செய்து விடுகிறேனே. அப்போது ஒட்டுமொத்தக் கோபுரமும் நிறைவாகிவிடும் என்று சொல்லித் தொடர்ந்து செதுக்கத் தொடங்கினார் சிற்பி.



ஒரு சின்னத் தவறுதானே என்று கடந்து போகிற கவனயீனம் பல வேளைகளில் பெரிய ஆபத்தாக மாறி விடுவது உண்டு. ஒரு பஸ் ஓட்டுனரின் கண நேரத் தவறு பல உயிர்களைக் குடித்து விடுகிறது. எனக்கு எல்லாம் தெரியும் தானே என்று ஆயத்தங்கள் ஏதும் இன்றி கற்பிக்கப் படுகிற கல்வி எத்தனை மாணவர்களின் வழிகளைத் தவறாக்கி விடுகின்றது.ஒரு விண்வெளி ராக்கெட்டில் ஏற்படுகிற ஒரு சிறிய தவறு, ஒரு பெரும் கனவைச் சிதைத்து விடுகிறதே. சின்னத் தவறுதானே என்று கருதும் பெற்றோரின் சிறிய அலட்சியம் பிள்ளைகளின் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் சீரழித்த கதைகள் பல எங்கள் காது களில் வந்து மோதித் திரும்பி இருக்கிறதே. ஒரே ஒரு இலக்கணப் பிழை ஒட்டுமொத்த வாக்கியத்தையும்தவறாக்கிவிடுகிறதே.சிறியதவறுகள்குறித்து கொஞ்சம் அதிகமாகவே அக்கறையாக இருங்கள்.

படகில் உண்டாகும் ஒரு சிறிய துளை உண்மையிலேயே சிறிய துளையா? ஒட்டுமொத்தப் படகையும் மூழ்கடிப்பதற்கு அது ஒன்று மட்டும் போதுமானது இல்லையா. இது யாருக்கும் தெரியாது தானே என்று நினைக்கிற ஒவ்வொரு தடவையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள், “கடந்து போகிற ஒவ்வொரு தடவையும் அது எனக்குத் தெரியுமே!”

அருட்பணி எஸ்.அஜந்தன்

---

## நொடியில் சிந்திக்க

வாழ்க்கை எனும் விதை விதைத்து எம்மை வாழ அழைத்த இறைவன் ஏன் வீழ்ச்சி, எழுச்சி எனும் இரு நபர்களை எம் கூடவே பயணிக்கச் செய்தார். வீழ்ந்தவுடன் எனக்கு என் நண்பன் உதவினான் என்று கூறுவதை விட “வீழ்ந்தேன் என் நண்பனின் உதவியுடன் எழுந்தேன். கடவுள் அவர் சார்பில் என் அருகில் செயலாற்றினார்” எனக் கூறுவோர்கள் அதிகமானால் வீழ்ச்சி எனும் நபர் எழுச்சியுடன் இணைந்து மிகுந்த கனிதருவார்.

வீழ்ச்சி என்பது, கடல் அலை போல். மத்தியில் உயர்ந்தாலும் இறுதியில் உன்னால் நீந்த முடியும் எனில் உன்னைத் தாழ்வாகக் கொண்டு வந்து எழுச்சி எனும் கரையைக் காட்டிவிடும். உன்னை வடிவமைத்த கடவுள் பல வர்ணங்களை உன்வாழ்வில் தீட்டினார். ஆனால் முழுமையான கருமை எனும் வர்ணத்தைத் தீட்டவில்லை. சரியோ, தவறோ உன் வாழ்க்கை எனும் புத்தகத்தை எழுதும் எழுது கோலை உன் கையிலே வைத்துக்கொள். பிறர் கையில் கொடுத்தால் கிறுக்கித் தள்ளி விடுவார்கள் எனக் ஹிட்லர் கூறியுள்ளார். எனவே வீழ்ந்தாலும் வாழ்வின் நோக்கம் மாறாது நம்பிக்கையுடன் எழுந்து எதிர்த்து நடப்போம்.

ஜொய்லின் தர்மிக்கா ஜெயராஜ்

# அன்பின் மகிழ்வு




குடும்பத்தில் மன்னிப்பு

யாழ் மறைமாவட்டக் குருக்களுக்காக பிரசுரிக்கப்படுகின்ற "FRATERNTY" என்கின்ற சஞ்சிகையில் அண்மையில் நாம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குடும்பத்தில் இருக்க வேண்டிய மன்னிப்பு என்கின்ற பண்பை மிகவும் அழகாகக் குறிப்பிடுகின்றார். இதனைக் குறிப்பிட்ட நம் ஆயர் அவர்கள் இந்த மன்னிப்பின் செய்தி அனைத்து மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றார்.

குறிப்பாக அனைத்துக் குருக்களும், துறவிகளும் இந்த மன்னிப்பின் செய்தியை யாழ் மறைமாவட்டத்தின் எல்லா மூலை முடுக்குகளுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றார். எனவே இந்த மன்னிப்பின் முக்கியத்துவத்தை எம் குடும்பத்தை மையப்படுத்திச் சிந்திக்க முனைகின்றோம்.

இம்மாகுலே இலிபக்சா (Emmaculee llibagiza) என்பவரின் வாழ்வு மன்னிப்பின்பாற்பட்ட ஓர் அழகான வாழ்வாகும். இது மன்னிப்பின் ஒரு உண்மைச் சம்பவமாகும். இவர் றுவாண்டா இனப்படுகொலையில் இருந்து உயிர் தப்பியவர். 1994ஆம் ஆண்டு இனப்படுகொலை ஆரம்பித்த வேளையில் Tutsi இனத்தைச் சேர்ந்த இந்த இளம் பெண்ணின் வாழ்வு முற்றாகச் சீர்குலைந்தது. தனக்கு ஆபத்து வருவதை உணர்ந்திருந்த இந்த இளம் பெண் இன்னும் ஏழு பெண்களுடன் ஓர் குளியலறையில் 91 நாட்கள் ஒளிந்து கொண்டார்கள். இந்த நாட்களில் தனது பெற்றோர், சகோதரர்கள் மற்றும் பல உறவினர்கள் கொல்லப்பட்ட செய்தியை அறிந்து வேதனையுற்றார். இந்த வேளையில் இருந்த அந்தச் சிறிய இடத்தில் சோகம், வெறுப்பு மற்றும் கோபம் என்னும் உணர்வுகளுடன் மிகவும் போராடினார்கள். ஆனாலும் செபம் என்னும் வலிமை மிக்க ஆயுதத்தைக் கையில் எடுத்துச் செபித்தார். "தந்தையே இவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறியவில்லை. அவர்களை மன்னியுங்கள்" (லூக்கா 23-34) தன் உயிரைக் காத்துக்கொள்ள இறைவனிடம் வேண்டிய அதே வேளை, தன் உயிரை, தன் இனத்தை அழிக்கத் தேடுபவர்களுக்காகவும் அவள் செபித்தாள்.

இனப்படுகொலையின் இறுதிவேளையில் தனது குடும்பத்தைக் கொன்றவர்களில் ஒருவரை அந்த இரவில் சந்திக்க நேரிட்டது. அந்த வேளையில் மனதில் இருந்த சோகத்தை, துன்பத்தை, கோபத்தைத் தாண்டி "நான் உன்னை மன்னிக்கின்றேன்" என்று இந்தப் பெண் உருக்கமாகக் கூறினார். இது மனித சக்தியினால் முடியாத ஒன்று. இந்தக் கடினமான ஒன்றைச் செய்ய அவளுக்குத் துணை நின்றது அவரின் ஆழமான செப வாழ்வு. அவர் வெறுப்பை விட்டு, சாந்தமாக வாழ இந்த மன்னிப்பு அவருக்கு உதவியது. இவர் தனது left to tell discogenic God amidst random holocaust என்ற புத்தகத்தில் இந்த ஆழமான ஆன்மீக அனுபவத்தை குறிப்பிட்டுள்ளார். இவரது மன்னிப்பின் பலனாக, மன்னிப்பு நல்லிணக்கம் மற்றும் குணப்படுத்தலின் தூதுவராக மாறினார். ஒரு மனிதன் வெறுப்பில் இருந்து வெளியேறி நிறைவோடு, மகிழ்வோடு வாழ மன்னிப்பு அவசியம் என்பதைத் தன் வாழ்வின் ஊடாக எடுத்தியம்பியுள்ளார்.

இந்த மன்னிப்பு என்னும் பண்பு எல்லாக் குடும்பங்களிலும் மலர வேண்டும். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒரு குடும்பத்தில் மூன்று முக்கிய வார்த்தைகள் என்றும் பாவிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். அவையாவன தயவு செய்து, நன்றி, மன்னிக்கவும் (please, thank you, sorry) என்பவையாகும்.

குறிப்பாக மன்னிப்பு என்பது மிக முக்கியமானதாகும். அவரின் சிந்தனைகளின் படி முழுமையான குடும்பம் என்று எதுவும் இல்லை. அதேபோல் முழுமையான கணவன் என்றோ அல்லது மனைவி என்றோ இல்லை. மேலும் மாமியாரைப் பற்றிப் பேசவே வேண்டாம். நாங்கள் அனைவரும் பாவிகள் தான். இன்னும் ஆரோக்கியமான குடும்ப வாழ்வில் மூன்று முக்கிய சொற்கள் பயன்படுத்த வேண்டியது அவசியம். "நான் செய்யலாமா நன்றி மற்றும் மன்னிக்கவும்" மேலும் ஒருபோதும் உங்கள் நாளை சமாதானம் இல்லாமல் முடிவுறுத்தாதீர்கள். கணவன், மனைவி தங்கள் நாளை ஒருபோதும் மன்னிப்பு இன்றி முடிக்கக் கூடாது. ஒரு கணவன் தனது திருமண வாழ்வின் வெற்றி பற்றி லுழரவரநந இல் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

நானும் எனது மனைவியும் திருமண நாளன்று முக்கிய முடிவு ஒன்று எடுத்து இந்த நிமிடம் வரை அதனை நாம் கடைப்பிடித்து வருகின்றோம். எப்போதாவது நமக்குள் கருத்து முரண்பாடு வந்தால் மாலை தூங்கப் போகும் முன் இருவரும் ஒருவர் மற்றவரிடம் மன்னித்துக் கொள்ளவும் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி அந்த நாளை மகிழ்வுடன் நிறைவு செய்கின் றோம். இன்று வரை எமது திருமண வாழ்வைப் பாதுகாத்தது இந்த மன்னிப்பேயாகும். ஒரு தம்பதியினர் தங்கள் வாழ்வில் திருமண வாழ்வின் 50 ஆண்டுகளை நிறைவு செய்கின்றார்கள் என்பதன் அர்த்தம் அவர்கள் 50 ஆண்டுகளாக மன்னிப்பைத் தம் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்துள்ளார்கள் என்பதாகும். எனவே குடும்பத்தில் மன்னிப்பு என்பது நாளாந்த பழக்கமாக மாறவேண்டும். மன்னிப்பு பெறுபவருக்கு மட்டுமல்ல அதைக் கொடுப்பவருக்கும் அமைதியைக் கொடுக்கின்றது. கோபத்திற்கும், பழிவாங்கும் எண்ணத்திற்குப் பதிலாக மன்னிப்பு, பெறுபவருக்கு மட்டுமல்ல அதைக் கொடுப்பவருக்கும் அமைதியைக் கொடுக்கின்றது. கோபத்திற்குப் பதிலாக மன்னிப்பு மன அமைதியையும், சுதந்திரத்தையும் நமக்கு அளிக்கின்றது. எனவேதான் நான் எத்தனை முறை மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று பேதுரு இயேசுவிடம் கேட்டபோது இயேசு ஏழு முறை மட்டுமல்ல 70 முறை ஏழு முறை என்றார். அதாவது மன்னிப்பு எல்லையற்றது என்பதை இங்கு உணர்த்துகின்றார்.

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

குடும்பத்தில் பெற்றோர் மன்னிப்புக் கேட்பதிலும் மன்னிப்புக் கொடுப்பதிலும் தம் பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். குடும்பம் என்பது அன்பின் முதல் பள்ளியாக இருப்பதினால் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு மன்னிப்பின் முக்கியத்துவத்தைத் தமது வாழ்வால் கற்பிக்க வேண்டும். இவ்வாறு மன்னிப்பு குடும்பத்தில் உள்ள உறவை ஆழப்படுத்தி அமைதி என்னும் பூங்காவை மலர வைக்கின்றது. கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தின் 13 ஆம் அதிகாரத்தில் அன்பைப் பற்றிக் குறிப்பிடுகையில் "அன்பு பொறுமையுள்ளது, நன்மை செய்யும், அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்" என்கிறார் புனித. மன்னிப்புப் பற்றி அடிக்கடி குறிப்பிடும் நாம் திருத்தந்தை குடும்பங்களுக்கு பின்வரும் அறிவுரைகளை நடைமுறைப் படுத்த அழைப்பு விடுக்கின்றார்.

1. குடும்பத்தில் சண்டைகளை நீண்டகாலம் தொடர விடாதீர்கள். அவற்றை எவ்வளவு விரைவில் தீர்க்க முடியுமோ அவ்வளவு விரைவில் தீர்க்க முயலுங்கள்.

2. குடும்பத்தில் கசப்பான சொற்களையும் தேவையற்ற குற்றச்சாட்டுக்களையும் தவிர்க்க முயலுங்கள். ஏனெனில் குற்றச்சாட்டுக்கள் காயங்களை இன்னும் அதிகரிக்கும்.

3. மன்னிப்பை எப்போதும் குடும்பத்தில் பயன்படுத்தித் தாழ்ச்சி என்னும் புண்ணியத்தில் வளருங்கள்.

எனவே மன்னிப்பதன் மூலம் குடும்பங்கள் உண்மையான அன்பு வாழ்வின் சமூகங்களாக மாறும். இவ்வாறு குடும்பங்கள் அன்பை உலகிற்கு பிரதிபலிக்கும் நல் இல்லங்களாக மாறும்.

## வாசக நேயர்களே!

25.12.2024 கிறிஸ்மஸ் சிறப்பு
இதழுக்கான ஆக்கங்கள்
வாசக நேயர்களிடமிருந்து
எதிர்பார்க்கின்றோம்.
கவிதைகளாகவோ, கட்டுரைகளாகவோ
மற்றும் சிறு குறிப்புக்களாகவோ
அனுப்பி வைக்க முடியும்.
உங்கள் ஆக்கங்கள் அனைத்தும் 15.12.2024
ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக
பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

ஆசிரியர் - பாதுகாவலன்
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
360, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## அகவொளி குடும்ப நலமையம்
## திருமண சேவை





### மணமகள் தேவை

வயது : - 43
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- O/L
தொழில் ::- வியாபாரம்
பிரதேச செயலகம் :- கரவெட்டி

வயது - 26
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- Ship Engineering
தொழில் :- கடற்தொழில்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 32
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை :- G.C,E.A.L
தொழில் :- விவசாயம்
பிரதேச செயலகம் :-யாழ்ப்பாணம்

வயது - 37
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Higher Diploma in Library Science
தொழில் :- Labrarian
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 41
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - G,C,E, O/L
தொழில் :- Own Business (London)
பிரதேச செயலகம்:- மருதங்கேணி

### மணமகன் தேவை

வயது - 26
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - BSC (hons) (Zoology)
தொழில் :- Demonstrator (Jaffna University)
பிரதேச செயலகம் :- கோப்பாய்

வயது - 32
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - B.Sc Engineering
தொழில் :- Engineer
பிரதேச செயலகம் :- கொழும்பு

வயது - 29
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - G.C.E. A/L
தொழில் :- வங்கி அலுவலக உதவியாளர்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்


வயது - 37
சமயம் : - இந்து
கல்வித்தகைமை - MBA
தொழில் :- வங்கி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்
அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம்
தொலைபேசி இலக்கங்கள்
077 - 904 7651, 021- 222 2856, 077- 942 2970.

(அமலன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: "மாறிய எனது பாதை மாற்றியவர் யாரோ" என்று கரவையூர்ச் செல்வம் அடிகளார் எழுதிய நூலைப்பற்றி முதலில் என்ன நினைக்கின்றீர்கள்? இரண்டாவது அவர் செல்லவேண்டிய பாதையை யாராவது மாற்றிவிட்டிருப்பார்கள் என நீங்கள் கருதுகின்றீர்களா?**

ப: நான் என்ன நினைக்கின்றேன் என்பதை விட்டுவிட்டு நூலைப் படித்துப் பாருங்கள் அமலன். உங்களது இரண்டு கேள்விகளுக்கும் அழகான, மிகச் சரியான, நேர்த்தியான விடைகளைப் பெற்றுக்கொள்வீர்கள்.




(விஜி, யாழ்ப்பாணம்)

**கேள்வி: சிலர் ஒருவருடைய மதிப்புத் தெரியாமல் நடப்பது மட்டுமல்ல அந்நபரையோ அல்லது நபர்களையோ மிக ஏளனமாகப் பார்த்துச் சிரிக்கின்றார்கள். இவர்களை என்ன செய்யலாம்?**

**அருட்பணி செ. அன்புராசா,அமதி**

# என் கேள்விக்கென்ன பதில்!

ப: விஜி, மிக விலையுயர்ந்த கார் ஒன்றைத் தனது வீட்டின் முன்பாக நிறுத்தியிருந்தார் ஒருவர். அவ்வழியாகப் போன தெருநாய் ஒன்று அதன்மீது சிறுநீர் கழித்தது. இதைப்பார்த்துக் கொண்டு நின்ற அதன் உரிமையாளன் சிரித்தார். இதனை அவதானித்த அவரின் உதவியாளன், "ஐயா நீங்கள் ஏன் அந்தநாயை அடித்துத் துரத்தாமல் சிரித்துக் கொண்டிருக்கின்றீர்கள்" என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அதற்கு அவர் மிகவும் சாந்தமாக, "அந்த நாய் அதன் அறிவிற்கு எட்டியதைச் செய்கின்றது. அதற்கு இக்காரின் மதிப்பைப்பற்றித் தெரியாது. அதைப்பற்றி எடுத்துக் கூறினாலும் அதற்குப் புரியாது" என்று சிரித்துக்கொண்டே கூறினார். இதுமாதிரித்தான் உங்கள் மதிப்பை அறியாது உங்களைக் கிண்டல்செய்து கேலிசெய்து அவமானப்படுத்தும்போது அவர்களை ஒருசிறு புன்முறுவலுடன் கடந்துசெல்லுங்கள். ஏனென்றால் அந்தநாய்கள் தாங்கள் நினைப்பதைத்தான் செய்துமுடிக்கும்!

(அன்ரன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: தொடுபேசியால் வரும் நன்மைகளைவிட தீமைகளே அதிகம்! தொடுபேசியினால் வரும் ஆபத்தை விலக்க என்ன செய்யலாம்?**

ப: அடிக்கடி தொடாமல் விட்டுவிடுங்கள், ஆபத்தைத் தவிர்க்கலாம்! சிறிய குருமடத்தில் நாங்கள் இருந்தபோது ஒரு விடயத்தைப் பற்றிச் சொல்லுகின்றபோது அருட்தந்தை பாவிலுப்பிள்ளை சுவாமி 'தொடப்படாது' என்று அறிவுறுத்துவார். அதனையே நானும் உங்களுக்கு சிபார்சு செய்கின்றேன். 'அடிக்கடி தொடப்டாது அன்ரன்'. "செல்லும் (கெடுபேசியும்) நெற்றும்(இணையம்) உடைத்தாயின் இல்வாழ்க்கை அல்லும் பகலும் கெடும்" என்ற யாரோ ஒருவருடைய புதுமொழி நினைவுக்கு வருகின்றது.



# நிறைவின்மை என்னும் நோய்

இன்றைய உலகில் "போதும்" என்ற நிறைவு காண, எல்லையே இல்லாத ஒரு நிலை தான் மிகவும் அச்சத்தை விளைவிக்கும் காரணியாக உள்ளது. "இன்னும் வேண்டும்" என்கிற வெறி நம்மை வருத்தத்தின் விளிம்புக்கு நகர்த்திச் செல்லும் என்பதைப் புரிந்து கொள்ள உதவும் ஒன்றே "போதும்" என்ற நிறைவு. செல்வம், கௌரவம், வலிமை மூன்றையும் சுவைக்கச் சுவைக்க அபாயகரமானதாக மாறிக் கொண்டே செல்லும். நவீன முதலாளித்துவம் இருவகையான சார்பு நிலைகளை உடையது. ஒன்று, செல்வத்தை உண்டாக்குவது. மற்றொன்று, பொறாமையை உண்டாக்குவது. பெரும்பாலும் இரண்டும் இணைந்தே பயணிக்கின்றன" என்கிறார் "பணம் சார் உளவியல்" நூலின் ஆசிரியர் மார்க்கன் ஹௌஸ்ஸேல்.

"போதும்" என்கிற மனமின்மையும், இன்னும் கொஞ்சம்" என்கிற ஏக்கமும் எதிர்பார்ப்பும் எங்கும் நம்மிடம் உள்ளதையும், நமக்குத் தேவையானதையும் பணயம் வைத்து, நம்மிடம் இல்லாததையும், நமக்குத் தேவையற்றதையும் சேர்க்கப் பாடுபடுகிறோம் என்பதே யதார்த்தம். இதில் ஏற்படும் நிறைவின்மை இறுதியில் ஏமாற்றத்தையும், விரக்தியையும் விளைவிக்கின்றன. "போதும்" என்ற நிறைவு இல்லாத வாழ்க்கை அர்த்தமற்றது, மகிழ்ச்சியற்றது. நிறைவு நோக்கிப் புறந்தேடும் எதுவும் நிலைக்கப் போவதுமில்லை. நிரந்தர நிம்மதியைத் தரப் போவதுமில்லை.

**முதலாளித்துவச் சிறையில் நாம்:**

நம்மிடம் "போதும்" என்கிற நிறைவின்மையால், வெளிப்புறச் செயல்களில் காட்டும் ஆர்வமும் குறிப்பாகப் பணம், பதவி, அங்கீகாரம் என்பதான அணுகுமுறையும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இரண்டு நிலைகளில் இதனைப் பட்டியலிடலாம்:

1. மட்டு மீறிய எதிர்பார்ப்புகள்.
2. எதிலும் சாதனை அணுகுமுறை.

உண்மையான மகிழ்ச்சி என்பது எதிர்பார்ப்புகளை இழத்தலிலே ஏற்றம் பெறுகிறது. நவீன முதலாளித்துவச் சிறையில் நாம் சிக்குண்டுள்ளோமா என்பதனை எப்படிக் கண்டுகொள்வது? நிச்சயம் நமது எண்ணங்களும், செயல்களுமே அதற்குச் சான்று! 2014 -ஆம் ஆண்டு நவம்பர் 22 அன்று வத்திக்கானில் பணியாற்றும் அனைவருக்குமான கிறிஸ்து பிறப்பு விழாத் தயாரிப்புக்காகத் திருத்தந்தை ஆற்றிய மறையுரையில் குறிப்பாக, குருக்களைப் பாதித்துள்ள பல்வேறு நோய்களைப் பட்டியலிட்டார். அவற்றைச் சுயபரிசோதனைக்கு உட்படுத்துவதே போதுமானது. சின்னச் சின்னக் காரியங்களில் நிறைவின்மை. பெரிது நோக்கி நகர்த்தும் எதுவும் மட்டுமீறிய எதிர்பார்ப்புகளின் விளைவே! பதவி, செல்வம், புகழ் மூன்றையும் சுவைக்கச் சுவைக்க அபாயகரமானதாக மாறிக் கொண்டே செல்லும் என்பது நியதி. நமது நிர்வாகப் பொறுப்புகளில் நாம் செயற்படும் முறைகளும், நமது எண்ணங்களும் எதனை மையம்கொண்டு செயல்படுகின்றன?

"நானே எல்லாம்" என்கிற ஆணவ நோய் உள்ளதா? தரப்படும் பணிகளில் மற்றவர்களோடு ஒருங்கிணைந்து செயற்படுவது கடினமாக உள்ளதா? தன்னைப் பற்றியே பெருமையாகப் பேசிக் கொள்ளும் தற்பெருமை மனநிலை உள்ளதா? மற்றவர்களைக் குறித்துப் புறணி பேசும் மற்றும் புறங்கூறும் பழக்கம் இயல்பாக உள்ளதா? தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களை எதற்கும் துதிபாடும் போக்கு உள்ளதா? எதையும் கண்டு கொள்ளாமல் அலட்சியம் செய்யும் மனப்பாங்கு பொருள் குவிக்கும் பேராசை உள்ளதா? எதார்த்த உதாரணங்களோடு சற்றுச் சிந்திப்போம்.

**களைகட்டும் மரணக் கலாசாரம்:**

முந்தைய நபரைவிடக் கூடுதலாக, மாறுபட்டுச் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் நல்லதாயின் வரவேற்கத்தக்கதே.அதை விடுத்து, முந்தையவரைவிட நற்பெயர் வாங்க வேண்டும் எப்படியாவது முன்னவர் நற்பெயருக்கு மறைமுகமாகக் களங்கம் வருவிக்க வேண்டும் அதனால், தனக்குப் புகழ் சேர வேண்டும் என்கிற எத்தனிப்பில் ஒருவர் செயற்பட ஆரம்பித்தால், அது தவறான அணுகுமுறையே. இத்தகு மனநிலைகளால் வெறுப்பும், புரிதலின்மையும், கசப்புணர்வுகளுமே கூடுகட்டிக்கொள்ளும். குறிப்பாக,சாதனை நோக்கிச் செயற்படும் அருட்பணியாளர்களால் மக்களின் மனநிலைகளிலும் அருள் வாழ்வு என்பதனை இரண்டாம் பட்சமாகிய மனநிலை உருவாகி உள்ளது. இது எவ்வளவு அபாயகரமானது! மக்களின் உரையாடல்களைக் கவனியுங்கள். "இவரைவிட முந்தையவர் நன்றாகச் செய்தார்", "அவரது காலத்தில் எத்-

**அருட்பணி ரைட்டஸ் மோகன்**

தனை பணிகள் நடந்தன", "எவ்வளவு சொத்துகள் வாங்கினார், கட்டடங்கள் கட்டினார் ஆனால், இவர் வெறும் பூசை வைக்கத்தான் லாயக்கு, வேற எதையும் கண்டுகொள்வதில்ல..."

இறைமக்கள் பங்குப் பணியாளரைப் பார்க்கும் பார்வை இங்ஙனம் மாறியிருக்கின்றன. முதலீடுகளை ஈட்டும் தொழில் அதிபர்களாக இறைபணியாளர்களைப் பாவிக்கும் போக்கை இறைமக்களிடம் விதைத்துவிட்ட பழிபாவம் நம்மையே சாரும். இன்றைய முதலாளித்துவச் சித்தாந்தங்களில் நம்முடைய வாழ்வும் பணியும் சிறைப் பட்டிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறென்ன நிதர்சனம் தேவை?

**நோய்களுக்கான மருந்தென்ன?**

கால ஓட்டத்தில் நம்மிடம் கறையாய்ப் படிந்துள்ள மரணக் கலாசாரங்களை வென்றெடுக்கத் திருத்தந்தை காட்டும் ஒரே வழி அன்பு! எதையும் கடமைக்காக, கட்டாயத்தினால், சட்டத்தினால், சடங்கிற்காக, சாதனைக்காகச் செய்யாமல், அன்பால் செயற்படுவதே ஏற்றம் தரும். அன்பைச் சுவைத்தவரால்தான் அன்பைப் பகிர முடியும். திரு அவையின் ஒழுக்கவியலின் மையமும் அதுவே.

இறுதியாக, நம்மிடம் இருக்கும் பகையுணர்வுகளை, வெறுப்புணர்வுகளைக் களைவதற்கு என்ன வழி? நட்புப் பாராட்டுவதே! மணத்துறவின் முக்கியம் .மன்னிப்பதில் முன்னோடிகளாக இருக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார். ஆகவே, நாமும் அன்பின் சாட்சிகளாய் அவனியில் வலம் வருவோமா!

✡


**விண்ணக வாழ்வின் 10ம் வருட நினைவு**



| மண்ணில் | விண்ணில் | மண்ணில் | விண்ணில் |
|---|---|---|---|
| 12 . 08 . 1946 | 01 . 12 . 2014 | 06 . 08 . 1950 | 04 . 03 . 2014 |



அமரர்
**சுவாம்பிள்ளை அருள்நேசவாசகன்**
(சுவாம்பிள்ளை)

அமரர்
**அருள்நேசவாசகன் சில்வித்திரேஸ்**
(கிளியம்மா)

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நாம் குடியிருப்பேன்"

கருவினில் எமை சுமந்து – உம்
கரங்களில் எமை அணைத்து – எம்
மனங்களில் உமை இருத்தி – நம்
ஆருயிர்தனை வளர்த்தவரே

உம் வலிகளைத் தாங்கி – எம்
உயிர்களைக் காக்க – நல்

வாழ்வுதனை வழிகாட்டி – உம்
குஞ்சுகளைக் காத்தவரே

ஆண்டுகள் ஈரைந்து சென்றாலும் – எம்
நெஞ்சினில் உமை இருத்தி – உம்
நினைவுகளில் என்றும் நாம் பயணிப்போம்.

என்றும் மறாத நினைவுகளில்
திரு திருமதி நீகன்ராஜ் குடும்பத்தினர்



**விண்ணக வாழ்வில் 31ம் நாள் நினைவஞ்சலி**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 . 08 . 1942 | 04 . 11 . 2024 |

அமரர்
**பிலிப்புப்பிள்ளை பற்றிக்துரைராசா**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர்
இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11:25)

88, கொடிகாம வீதி,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# வலைப்பாடுப் பங்கில் உறுதிப்பூசுதல்



வலைப்பாடு தூய அன்னம்மாள் மற்றும் கிராஞ்சிப் பங்குப்பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருளடையாளம் வழங்கும் நிகழ்வு வலைப்பாடு தூய அன்னம்மாள் ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி கெ.ஏரோணியுஸ் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் கடந்த 08ம் திகதி நடைபெற்றது. யாழ் மறைமாவட்ட **ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் பேணட் ஞானப்பிரகாசம்** அவர்களின் தலைமையில் வலைப்பாடு தூய அன்னம்மாள் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் 59 மாணவ மாணவிகள் உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் இறைவார்த்தைகளைக் கற்பித்து நெறிப்படுத்திய யாழ் திருக்குடும்பச் சகோதரிகள் மற்றும் பெற்றோர், ஆசிரியர்களையும் நன்றியோடு நினைக்கின்றோம். அத்தோடு மதிப்பிற்குரிய **ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் பேணட் ஞானப்பிரகாசம்** அவர்களின் குருத்துவப் பணிவாழ்வின் 50வது பொன்விழாவை நினைவு கூர்ந்தும் நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டு, மரம் நடுகை வைபவமும் சிறப்பாக இடம் பெற்றது.

# அன்னை திரேசா சமூக சேவைக்குழுவின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு



யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இயங்கிவரும் அன்னை திரேசா சமூக சேவைக்கு ழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இரத்தான நிகழ்வு கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது. குருமட மாணவர்களின் ஒழுங்குபடுத்தலில் கல்லூரியின் ஜோய்கிறிசோஸ்தம் மண்டபத்தில் நடைபெற்ற இவ்இரத்ததான முகாமில் குருமட மாணவர்கள், அருட்தந்தையர்கள், பணியாளர்களென 45 வரையான குருதிக்கொடையாளர்கள் கலந்து இரத்ததானம் வழங்கியிருந்தார்கள்.

# யாழ். மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய கிறிஸ்மஸ் கரோல் பாடல் போட்டி



யாழ். மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்ட இளையோருக்கான கிறிஸ்மஸ் கரோல் பாடல் போட்டி கடந்த 24ஆம் திகதி யாழ். மறைநதி கத்தோலிக்க ஊடக மையத்தில் நடைபெற்றது. மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இணைப்பாளர் அருட்தந்தை யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இப்போட்டியில் யாழ். மறைக்கோட்ட பங்குகளை சேர்ந்த 06 குழுக்கள் பங்கு பற்றியிருந்தன. இப்போட்டியில் பங்குபற்றிய நாவாந்துறை பங்கு முதலாமிடத்தை பெற்று மறைமாவட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளதுடன் குருநகர் பங்கு இரண்டாமிடத்தையும் சுண்டுக்குளி பங்கு மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

# தாதியர், நோயாளர் பராமரிப்பு நிறுவனப் பணியாளர் கௌரவிப்பு நிகழ்வு



TS3 தாதியர் மற்றும் நோயாளர் பராமரிப்பு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட பணியாளர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 24ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. நிறுவன இயக்குநர் திரு. ராமசாமி துசாந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் லயன்ஸ் கழக முன்னாள் தலைவர். திரு. ரட்ணம் கோகுலன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை போல் நட்சத்திரம், திருமதி. தனேஸ்குமார் சத்தியமாா, யாழ்ப்பாண சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திரு. இராமசாமி இராயன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். இந்நிழ்வில் நிறுவனத்தில் கடந்த காலங்களில் அர்ப்பணிப் புடன் பணியாற்றிய பணியாளர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் கடந்த காலங்களில் நிறுவனத்தில் பணியாற்றி இறைபதமடைந்த திரு. வைஸ்ணவன் அவர்களுக்கான நினைவஞ்சலியும் இடம்பெற்றது. திரு. ராமசாமி துசாந்தன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இந்நிறுவனம் யாழ்ப்பாணத்தை தலைமையகமாக கொண்டு தற்போது 20 பணியாளர்களுடன் முதியோர் மற்றும் நோயாளர் பராமரிப்புச் சேவையை ஆற்றி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# பளை மத்திய கல்லூரியில் ஒளி விழா



கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியில் முன் னெடுக்கப்பட்ட ஒளிவிழா கல்லூரி முதல்வர் திரு. குமாரசாமி ரவீந்திரா அவர்களின் தலை மையில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது. கல்லூரியின் கிறிஸ்தவ மன்றப் பொறுப்பாசிரியர் திரு. டனிஸ் சத்தியசீலன் மற்றும் அருட்சகோதரி பிரபாஜினி பிரான்சிஸ் ஆகியோரின் உதவியுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் கலைநிகழ்வுகளுடன் 2023 கத்தோலிக்க திருமறைத் தேர்வில் விசேட சித்தி பெற்ற மற்றும் ஒளி விழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான கௌர விப்புக்களும் இடம்பெற்றன. புலோப்பளை பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரன் ஜோர்ஜ் அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ்ப் பா ணம் திருச் சிலுவை சுகநல நிலைய தாதியர் கல்லூரி அதிபர் அருட்சகோதரி ஜெரால்டின் மை க்கல் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அருட்சகோதரிகள், அயற்பாடசாலை அதிபர்கள், மாணவர்களென பலரும் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சி அறிவியல்நகர் பல்கலைக்கழக கிறிஸ்து அரசர் ஆலயத் திருவிழா



கிளிநொச்சி அறிவியல்நகர் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள கிறிஸ்து அரசர் ஆலய திருவிழா பல்கலைக்கழக ஆன்மீக இயக்குநரும் கிளிநொச்சி பங்குத்தந்தையுமான அருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது. மூன்று மொழிகளும் உள்ளடக்கப்பட்ட திருவிழா திருப்பலியை கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இத்திருப்பலியில் அருட்தந்தை இருதயதாஸ், கிளிநொச்சி உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தை ராஜ் டிலக்சன், யாழ். பல்கலைக்கழக ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை மைக் டொனால்ட், அருட்சகோதரிகள், பங்குமக்கள், பல்கலைக்கழக மாணவர்களென பலரும் கலந்து செபித்தனர்.

# யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை ஒளி விழா



யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையில் முன்னெடுக்கப்பட்ட ஒளிவிழா கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது. பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியசீலி மரியதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை டிலூசன் பியூமால் அவர்கள் கலந்து ஒளிவிழா செய்தியை வழங்கினார். இந்நிகழ்வில் யாழ் திருக்குடும்ப கன்னியர்மடக் குழுமத்தலைவி அருட்சகோதரி லுமினா போல்ராஜ், அருட்சகோதரிகள், அயற்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்க ளெனபலரும் கலந்துகொண்டனர்.

# இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட மகாவித்தியாலய ஒளி விழா



இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட மகாவித்தியா லயத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒளிவிழா கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது. பாடசாலை அதிபர் அருட்சகோதரி அமிர்தா அன்ரன் தேவதாஸன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலைநிகழ்வுகளும் ஒளிவிழா போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்தந்தை மைக் மயூரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் அருட்தந்தை தேவராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

# புங்குடுதீவுப் பங்கில் "மறைக்கல்வி எழுச்சி மாத" சிறப்பு நிகழ்வுகள்



புங்குடுதீவுப்பங்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் "மறைக்கல்வி எழுச்சி மாத" சிறப்பு நிகழ்வுகள் கடந்த 24ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. பங்குத்தந்தை அருட்தந்தை லியான்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயத்தில் கொடி யேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பங்குத்தந்தை தலைமையில் சிறப்புத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருப்பலி நிறைவில் மறைக் கல்வி மாணவர்கள் மற்றும் மறையா சிரியர்களுக்கான கருத்தமர்வுகள் இடம்பெற்றன. இக்கருத்தமர்வில் 100 மறைக்கல்வி மாணவர்களும் 10 மறையாசிரியர்களும் பங்கு பற்றியிருந்ததுடன் யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் மற்றும் மறைக்கல்வி நிலையப் பணியாளர்கள் வளவாளர்களாகக் கலந்து நிகழ்வை வழிப்படுத்தினர்.

# கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தில் பணியாற்றி இறைபதமடைந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு



கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தில் கடந்த காலங்களில் பணியாற்றி இறை பதமடைந்தவர்களை நினைவுகூர்ந்து முன்னெ டுக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வு கடந்த 29ஆம் திகதி கிளிநொச்சி கரித்தாஸ் நிறுவனத்தில் நடைபெற்றது. நிறுவன இயக்குநர் அருட்தந்தை செபஜீவன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட முன்னாள் ஆயரும் மறைமாவட்ட கியூடெக் நிறுவன ஸ்தாகபருமான பேரருட்தந்தை தியோகுப்பிள்ளை மற்றும் நிறுவன முன்னாள் இயக்குநர்கள் அருட்தந்தை தேவராஜா, அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன், அருட்தந்தை பயஸ், அருட்தந்தை ஜெபநேசன், அருட்தந்தை பீற்றர் மற்றும் நிறுவனப் பணியாளர்கள் ஆகி யோரின் உருவப்படங்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற் அவர்களின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் இறை பதமடைந்தோரின் உறவுகள் பங்குபற்றினர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு மார்கழி மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.